
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU




முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 05 திங்கட்கிழமை (22.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 327



3 லட்சம் குழந்தைகளுக்கு உணவில்லை

13



உண்ணாவிரதப் போராட்டத்தால் பலன் இல்லை

12






எமக்குள் ஊக்குவிப்பு வேண்டும்...

06

# விசாரணையில் நம்பிக்கையில்லை என்கிறார் சரவணபவன் எம்.பி.

'உதயன்' செய்தி ஆசிரியர் மீதான தாக்குதல் தொடர்பாக நடாத்தப்பட்டு வரும் பொலிஸ் விசாரணைகளில் தமக்கு நம்பிக்கையில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினரும், அப்பத்திரிகையின் இயக்குநருமான சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் வெளியிட்ட தகவல்கள் நம்பகத்தன்மையற்றது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரைக் கைது செய்துள்ளதாக அண்மையில் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இந்த சம்பவத்தின் பின்னணியில் ஓர் சட்டத்தரணி இருப்பதாக பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருந்தனர். சட்டத்தரணியின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை எனவும் இதனால், இந்தத் தகவல்கள் சோடிக்கப்பட்டவையாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# விபத்தில் சிக்கியது எம்.பி.யின் வாகனம்

(யாழ்ப்பாணம்)

த.தே.கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரனின் வாகனம் வல்லைவெளிப் பகுதியில் நேற்று முற்பகல் விபத்துக்குள்ளானது. இருபாலையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பாலா என்பவரின் மோட்டார் சைக்கிளுடன் எம்.பியின் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் கடலில் தூக்கி வீசப்பட்டார். படுகாயங்களுடன் அவரை மீட்ட பொலிஸார் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தற்போது அவர் மாற்றப்பட்டுள்ளார். (எஸ்)

# அவசரகாலச் சட்டம் செப். 08இல் அகலும்?

(கொழும்பு)

**நாட்டில் தற்போது இருக்கும் அவசரகாலச் சட்டம் செப்ரெம்பர் 08 ஆம் திகதிக்கு மேல் நீடிக்கப்படமாட்டாது என அரசு தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.**

அத்துடன், ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தில் தேவையான திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் தற்போது ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 08ஆம் திகதியுடன் அவசரகாலச் சட்டத்தின் ஆயுள காலம் நிறைவடைகிறது. இச்சட்டத்தை மேலும் நீடித்துச் செல்லும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று தெரியவருகிறது.

செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் நாடாளுமன்ற அமர்வில் அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான பிரேரணை எதனையும் அரசு சமர்ப்பிக்கப் போவதில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2005 ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து நாட்டில் அவசரகாலச் சட்டம் தொடர்ச்சியாக நீடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முள்ளிவாய்க்காலுக்கு ஆணைக்குழு விஜயம்

யுத்தச் சாட்சியங்களைப் பதிவு செய்தது



(முல்லைத்தீவு)

இறுதியுத்தம் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பகுதிக்கு நல்லிணக்க ஆணைக் குழுவினர் நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்தனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயத்தை நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொண்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் பொதுமக்களும் அரசாங்க ஊழியர்களும் கலந்துகொண்டு நேற்று தமது வாக்குமூலங்களை வழங்கியதாக அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்தார்.

இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற பகுதிகளான முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்புப் பகுதிகளையும் ஆணைக்குழுவினர் சென்று பார்வையிட்டதாகவும் அவர் கூறினார்.

# நவீன தொடர்பாடல் கருவி முள்ளிவாய்க்காலில் மீட்பு



(முல்லைத்தீவு)

அமெரிக்கத் தயாரிப்பான அதி நவீன தொடர்பாடல் கருவி ஒன்று முல்லைத்தீவின் முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து இராணுவத்தினரால் மீட்கப்பட்டிருக்கிறது.

யுத்தத்தின் போது இரகசிய தகவல்களை அனுப்புவதற்கு பயன்படுத்தப்படும் பீ.ஆர்.டி 77 என்ற அதி சக்தி வாய்ந்த இக்கருவி அமெரிக்காவின் தயாரிப்பாகும். புலிகள். பயன்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் இந்தக் கருவி முள்ளிவாய்க்கல் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த அதிநவீன தொடர்பாடல் கருவி எவ்வாறு புலிகளுக்கு கிடைத்தது என்பது குறித்து அரசாங்கம் தற்போது விசாரணை நடத்தி வருகிறது.

# வெடி தயாரித்த சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

தீக்குச்சிகளைப் பயன்படுத்தி வெடி தயாரித்து விளையாட முற்பட்டபோது ஏற்பட்ட விபரீதத்தால் சிறுவன் படுகாயமடைந்தார்.

நேற்று மாலை 4.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அரியாலை பகுதியைச் சேர்ந்த கவிப்பிரியன் (வயது-11) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# தமிழ்க் கட்சி பிரமுகர்கள் இன்று புதுடில்லி பயணம்

உலக அபிவிருத்திக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனித உரிமைகள் ஒன்றியம் (PFHRGD) எனும் அமைப்பின் அனுசரணையில் நடைபெறும், இரண்டு நாள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இன்று புதுடில்லி செல்கின்றனர்.

மேற்படி ஒன்றியத்தின் தலைவரான இந்திய காங்கிரஸ் கட்சியின் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பனின் ஏற்பாட்டில் 23ஆம் 24ஆம் திகதிகளில் இம்மாநாடு நடைபெறுகிறது. 'துயரும் தீர்வும்' என இம் மாநாட்டிற்கு தலைப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கைத் தமிழ் கட்சிகள் மத்தியில் அரசியல் கருத்தொற்றுமையை ஏற்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சி சார்பில் மாவை சேனாதிராஜா, எம்.ஏ. சுமந்திரன், கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.சந்திரகாந்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணியின் சார்பில் சிறிதரன், இரா. துரைரெத்தினம், ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஸ் அணியின் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், ஹென்றி மகேந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி புளொட் சார்பில் கந்தையா சிவநேசன், பெனடிக் தனபாலசிங்கம் ஆகியோர் மாநாட்டிற்காகச் செல்கின்றனர். (15ஆம் பக்கம் பார்க்க)

# புத்தளத்தில் மோதல் பொலிஸார் ஒருவர் பலி

புத்தளத்தில் கிறீஸ்மனிதன் விவ்காரம் தொடர்பாக பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நேற்றிரவு ஏற்பட்ட மோதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார். இம் மோதல் சம்பவத்தில் மேலும் ஒரு கான்ஸ்டபிள் உட்பட 6 பேர் காயமடைந்துள்ளனர்.

புத்தளம் மணல்குண்டுவ எனும் கிராமத்தில் மேற்படி கிறீஸ் மனிதன் பரபரப்பு ஆரம்பித்தது. அதைத்தொடர்ந்து இடம்பெற்ற மோதல்கள் புத்தளம் நகருக்கும் பரவின. இந்நிலையில் புத்தளம் நகரில் வைத்து பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பொது மக்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

# காங்கேசனில் சிப்பாய் மரணம்

(காங்கேசன்துறை)

கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த சிப்பாய் குருநாகல் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் இவரின் மரணம் தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


## உங்கள் தினமுரசில்

**வரும் புதன்கிழமை முதல் க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்கள்.**

தகைமைவாய்ந்த ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களினால் தயாரிக்கப்பட்டு வாரத்தில் மூன்று நாட்கள் தினமுரசு நாளிதழில் வெளியாகிறது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களிலும் தினமுரசு நாளிதழில் கல்வி முரசு இலவச இணைப்பு.

# கணவனை இழந்த பெண்களுக்கு விசேட வாழ்வாதாரத் திட்டங்கள்



(கிளிநொச்சி)

யுத்தத்தினால் கணவரை இழந்த பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

நீண்டகால யுத்தத்திலிருந்து மீண்டுள்ள மக்கள் தமது வாழ்வியல் மேம்பாட்டிற்கான வழிமுறைகளைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். எனவே அதற்கு தகுந்த பாதையினை ஏற்படுத்திக் கொடுப்பதும் அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் சென்று மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுமே இன்றைய காலத்தின் தேவையாகவுள்ளதென ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பரந்தன் காஞ்சிபுரம் பொது நோக்கு மண்டபத்தில் காஞ்சிபுரம் குமரபுரம் ஆகிய கிராம மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் எம்மக்களின் அடுத்த கட்ட வாழ்க்கையை கேள்விக்குறியாக்கியுள்ளது. இதனால் மக்கள் தமது வாழ்க்கையின் அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியாதுள்ளனர். எனவே நாம் மக்களுக்கு மீண்டும் அவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தீவிரமாக செயற்பட்டு வருகின்றோம்.


இங்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் நிரந்தர குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பதற்கான செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

இதேவேளை யுத்தத்தினால் கணவரை இழந்த பெண்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காகவும் விசேட திட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவரவும் முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளோம். இவை அனைத்தையும் பல்வேறுபட்ட திட்டங்களுக்கு ஊடாக கட்டம் கட்டமாக செயற்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மிகவிரைவாக மேற்கொள்ளவுள்ளதாகவும் இவற்றை நாம் அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் நின்று மனிதாபிமான அடிப்படையில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.




எந்த மனிதன் தன் சகோதரருடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக நடந்து சென்று முயற்சி செய்கின்றாரோ அது அவருக்கு பத்து ஆண்டுகள் இஃதிகாப் இருப்பதை விடச் சிறந்ததாகும். (105)

# பொன்னாலை வரதராஜப் பெருமாளுக்கு இன்று வருடாந்த இரதோற்சவம்



(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா மிகவும் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கிருஷ்ண ஜெயந்தியான இன்று தேர்த்திருவிழாவும் உறியடி உற்சவமும் நடைபெறுகிறது. நாளை திருவடிநிலை சமுத்திரக்கரையில் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

# கோப்பாயில் விபத்து இருவர் படுகாயம்

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்திற்குள்ளாகி இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் 1.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கிரிசாந் (வயது-14) பகிர்தராஜ் (வயது-24) ஆகியோரே படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எஸ்)

# சிறுவன் காயம்

(சங்கானை)

வீட்டின் கூரை மீது ஏறிய சிறுவன் தவறி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார்.

சங்கானைப் பகுதியில் நேற்றுக்காலை 11.00 மணியளவில் இடம்பெற்ற சம்பவத்தில் கனகசுந்தரம் ரஜீவன் (வயது-16) என்ற சிறுவனே படுகாயங்களுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# கோண்டாவிலில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுர தேவஸ்தானத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவமும் உறியடி உற்சவமும் இன்று இடம்பெறவுள்ளது.

மேற்படி ஸ்ரீ கிருஸ்ண ஜெயந்தி உற்சவம் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள் இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் 3 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி வசந்தமண்டபப் பூசையும் இடம்பெற்று சுவாமி உள்வீதி வெளிவீதி வரும் அற்புதக்காட்சியும் இடம்பெறும். வெளி வீதியில் முட்டி உடைத்தல் என்னும் உறியடி உற்சவமும் இடம்பெறும்.(நி)




## தெய்வீக இசையரங்கு

நல்லூர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையில் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8.00 மணிவரை தெய்வீக இசையரங்கு நடைபெற்றுவருகிறது.

இதில் 19 ஆம் திருவிழாவான இன்று திருமதி விக்னேஸ்வரி நரேந்திராவின் பாட்டுக் கச்சேரியில் வயலின் - ஏ.ஜெயராமன், மிருதங்கம் - எஸ்.மகேந்திரன், கடம் செல்வன் எம்.செல்வன், எம்.லோகேந்திரன் ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

❖ ❖ ❖ ❖

## ஆன்மீகச் சொற்பொழிவுகள்


நல்லூர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் தினமும் மாலை 6.30 மணிக்கு 63 நாயன்மார் மண்டபத்தில் நடைபெற்றுவரும் சிறப்புச் சொற்பொழிவில் இன்று 'சங்கத் தமிழ்' என்னும் தொனிப்பொருளில் சைவப்புலவர் ஜனகா சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றவுள்ளார்.

❖ ❖ ❖ ❖

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நடத்தும் சமயச் சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று 'கந்தன் உண்டு கவலையில்லை' என்னும் பொருளில் கலாநிதி மா.வேதநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளில் மருதனார்மடம் ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலை, கோண்டாவில் தில்லையம்பதி அறநெறிப் பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தற்காலிக அடையாள அட்டை வழங்குவதற்கு ஏற்பாடு



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாதவர்கள் கிராம உத்தியோகத்தரை அணுகி அவற்றை பெற்றுக்கொள்ள முடியுமென குறிப்பிடப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தல் மற்றும் மாகாணசபை தேர்தலின் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டையை இந்த முறை தேர்தலில் பயன்படுத்த முடியாதென மேலதிக தேர்தல் ஆணையாளர் டபிள்யூ.பீ. சுமனசிறி தெரிவிக்கிறார்.

எவ்வாறாயினும் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டைகளை இம்முறை பயன்படுத்த முடியுமெனவும் தேர்தல் செயலகம் குறிப்பிடுகிறது.

# வவுனியா ஊடாக ஸ்ரீ தலதா பேரணி





வவுனியா ஸ்ரீ போதிதக்சிணாராமய விகாரை, மடுக்கந்த தலதா விகாரை இணைந்து ஏற்பாடு செய்துள்ள ஸ்ரீதலதா பேரணி நேற்று முன்தினம் மாலை வவுனியா நகர் வழியாக ஊர்வலமாக சென்றது.

புத்தபெருமானின் புனித தந்தம் கண்டி தலதா விகாரைக்கு எடுத்துச் செல்லப்பட்டமையை நினைவு கூரும்முகமாக கடந்த காலங்களில் நடத்தப்பட்டு வந்த இந்த பேரணி கடந்த சுமார் 30 வருடகாலம் அமைதியற்ற சூழலினால் நடைபெறவில்லை

மீண்டும் வவுனியா நகரில் இந்தப் பேரணி கண்டி வீதி விகாரையில் ஆரம்பித்து கண்டி வீதி, கடைவீதி, இறம்பைக்குளம், வெளிக்குளம் வழியாக மடுக்கந்த தலதா விகாரையை சனி இரவு 9 மணியளவில் சென்றடைந்தது.

பேரணியில் யானையும் மூவினங்களுடைய கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தது. சீயம் பலகஸ்வ்வ விமலசார தேரோ, மூவட்டகம ஆனந்ததேரே, மாவட்ட அரச அதிபர் மற்றும் பாதுகாப்பு படை சிரேஷ்ட உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் பேரணியில் கலந்து கொணடனர்.

உடல், வாய், மனம், பணம் என்ற நான்கு வகைகளிலும் பாவம் செய்கிறோம் இதற்குப் பிராயச்சித்தமாக உடலால் உதவியும் வாயால் பகவான் நாமமும் மனதால் தியானமும், பணத்தால் தர்மமும் செய்ய வேண்டும்.

- காஞ்சிப்பெரியவர்


தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com


## ஆயிரம் கைகள் நீட்டி அணைப்பவன்

எங்கெங்கு காணிலும் சக்தியடா என்று பாரதி பாடியதை, நாம் இன்று மின்சக்தி குறித்துச் சொல்லியும் வியந்துகொள்ள முடியும். மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, உலகை இயக்குகிற சக்தியாக அதுவே மாறிவிட்டது.

மின்சாரத் தடை ஏற்பட்டால் நம் இயக்கங்கள் அனைத்தும் தடைப்பட்டு விடுகிறது. அது இன்றி நமக்குக் காற்றில்லை, வெளிச்சமில்லை, தொழிலில்லை, கைகால் ஒடுவதில்லை என்றாகிவிட்டது. இன்னும் நமக்குத் தடையின்றி மின்சாரம் கிடைப்பதில்லை. தடைப்படும் போதெல்லாம் எரிச்சலுற்றுப் படும் அவஸ்தையிலிருந்தும் மீள்வதாயில்லை.

நீர் வீழ்ச்சியிலிருந்து பெறும் மின்சாரம் நமக்குப் போதவில்லை. மழை பொய்த்துவிட்டால் அதைத் தொடர்ந்து மின்சாரமும் பொய்த்துவிடும் என்ற பதற்றமும் நம் நாட்டுக்குண்டு.

மின்சாரத்தின் தேவைஅதிகரித்தபடியே செல்கிறது. அனலிலிருந்தும் அணுவிலிருந்தும் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும வழிமுறைகளுக்கு நாம் இப்போதுதான் செல்கிறோம். வளர்ச்சியடைந்த நாடுகளோ, அதன் ஆபத்துக்களை உணர்ந்து படிப்படியாகக் கைவிடும் திட்டங்களுக்குச் சென்றுவிட்டன.

அணு மின் உலைகளின் கழிவுகள் பூமிக்கடியில் சேகரமாகிக் கொண்டிருக்கின்றன. இயந்திரத் தவறாலோ இயற்கை அனர்த்தத்தாலோ உலைகள் வெடித்துவிட்டால் ஏற்படப்போகும் பாதிப்பு நினைத்தாலே குலை நடுங்கவைக்கக் கூடியது.

ஜப்பான் பூகம்பத்தால் சூடேறிய அணு உலைகளைக் குளிர்விக்க அவர்கள் பட்ட அவஸ்தையை உலகம் முழுவதுமே ஊடகங்கள் ஊடாகப் பதற்றமுடன் பார்த்துக்கொண்டிருந்தது. சூடாகி வெடித்திருந்தால், அழிவு ஜப்பானுக்கு மட்டுமல்ல என்பதே அதிலிருந்த பயங்கரம்!

உடனடியாகவே ஜேர்மனி, 2020 இற்குப் பிறகு நாட்டில் அணு உலை மின்சாரமே இருக்கக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டது. இத்தாலியிலும் அணு உலை மின்சாரத்தை நிறுத்த முடிவுசெய்து விட்டார்கள். ஏனைய அணு உலை உள்ள நாடுகளிலும் மக்கள் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

நாம் இப்போதுதான் மின்சாரத்திற்காக நிலக்கரிக்கும், அணுத்தொழில் நுட்பத்திற்கும் செல்கின்றோம். அதன் சுற்றுச் சூழல் கேடு பற்றி நம் மத்தியில் பெரிய விழிப்புணர்வு எதையும் காணமுடியவில்லை. இத்தனைக்கும் தற்போதைய மின்சக்தி அமைச்சர், கடந்த அமைச்சரவையில் சுற்றுச் சூழல் அமைச்சராக இருந்தவர் என்பது ஒரு முரண்நகை!

அணுவுக்கும் கரிப் புகைக்கும் பதிலாக சூரிய ஒளியிலிருந்தே மின்சாரத்தைப் பெறக்கூடிய புதுப்புது இலகு வழிகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்டுக்கு மூன்று மாதமே வெயில் எறிக்கும் ஜேர்மனியில் சூரியனை நம்பி அணுவுக்கு விடைகொடுத்து அனுப்பிவிடலாம் என்ற அளவுக்கு யோசிக்கிறார்கள்.

வருஷம் 12 மாதமும் வெயில் எறிக்கும் நாட்டில் வாழும் நாம் ஏன் அணுவிலும் கரியிலும் மின்சாரத்தைப் பெறுவதற்காகச் செலவு செய்யவேண்டும்? சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் பெறப்படுவதில் திறனைக் கூட்டும் திட்டங்களுக்காகச் செலவு செய்யலாமே!

சீனாவிடமிருந்து நாம் அனல்மின் நிலைய உதவியைத் தானா பெறவேண்டும்? சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கும் தகடுகளை மிக அதிக அளவில் இன்று உற்பத்தி செய்து கொண்டிருக்கும் நாடு சீனாதான். அவர்களுடைய உதவியை அந்த வகையில் பெற்று நம் நாட்டிலும் அந்தத் தயாரிப்புக்களை மேற்கொண்டால் அது மேலும் புத்திசாலித்தனமாக இருக்கும்.

ஒரு துளி மழை நீரும் கடலுக்குச் சென்று வீணாகி விடக் கூடாது என்று நீரைச் சேமித்த மன்னர்கள் இருந்த நாடு இது. அதுபோல் இன்று சூரிய ஒளியைப் பயன்படுத்திக் கொள்ள ஒவ்வொரு வீட்டுக் கூரையையும் தயாராக்க முடியாதா?

சூரியனுக்குப் பொங்கிப் படைத்துக்கொண்டிருப்பதையே மட்டும செய்துகொண்டிராமல், அவன் தரும் சக்தியை வாங்கிக கொள்ளவும் நாம் தகைமையுடையவராக வேண்டும்.

- ஆசிரியர்

# சவால்கள் நிறைந்த துறையாக ஊடகத்துறை விளங்குகின்றது

## பேராசிரியர் விசாகரூபன்



(கொழும்பு)

ஊடகத்துறையானது ஏனைய துறைகளைவிட சவால்கள் நிறைந்ததாகக் காணப்படுகிறது. இந்த வகையில் ஊடகத்துறை சமூகத்தை நல்வழிப்படுத்தக் கூடியதான செய்திகளை மக்களுக்கு வழங்க வேண்டும் என யாழ்.பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியர் விசாகரூபன் தெரிவித்தார்.

அருள் திரு ரூபன் மரியாம்பிள்ளையின் ஆசிரியத்தலையங்கம் ஓர் அறிமுகம் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக அறிக்கையிடுவதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்துளளனர். மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

ஊடகங்களுக்கு சமூகப் பொறுப்பு அவசியம் மக்களின் நன்மைக்காக ஊடகங்கள் செயற்படவேண்டும். ஊடக உள்ளடக்கத்துக்காக மட்டும் மக்களைப் பயனபடுத்தக் கூடாது. மக்களிடம் நன்மதிப்பைப் பெறும் வகையில் சமூக இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டு ஊடகங்கள் செயற்படவேண்டும்.

சமூகம் மீதான பார்வையை வெளிப்படுத்தும் வகையில் மக்களின் பரவலான கருத்தைப் பெற்று அதனைப் பத்திரிகையின ஊடாக மக்களுக்கே திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினர் நூலினை வெளியிட்டு வைக்கக் கனடா ஓய்வூதியர் திருமதி இமானுவேல் சவரியம்மா முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி நாகரத்தினம் சிறப்புப் பிரதியைப் பெற்றுக்கொண்டார். யாழ்.பல்கலைக்கழக ஊடகத்துறை விரிவுரையாளர் செல்வி த.கிருத்திகா உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். (10)

# இலங்கையில் மையம் கொள்கிறது வெளிநாட்டு முதலீட்டுப் புயல்

இவ்வருடத்தின் முதல் அரையாண்டுப் பகுதியிலும் அதனைத் தொடர்ந்தும் இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துக் காணப்பட்டதாக இலங்கை மத்திய வங்கிய வெளியிட்டிருக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருட முதல் அரையாண்டில் 0.413 பில்லியன் அமெரிக்க டொலர் என அதி கரித்துள்ளதாக மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம் தெரிவிததுள்ளது.

இந்த வருடத்தில் ஒரு பில்லியன் ஐ.அ.டொலரை வெளிநாட்டு நேரடி முதலீடாக பெறவேண்டும் என இலங்கை இலக்கு வைதத்துள்ள நிலையில், இலக்கின் அரைப பங்கினை இந்த வருட முதல் அரையாண்டில் அடைய முடிந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இவ்வாறு வெளிநாட்டு நேரடி முதலீகள், வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு தொழிலாளார்களின் பண அனுப்பல்கள், சுற்றுலா மற்றும் இதர சேவைத் துறையின் வருமானங்கள் போன்றவற்றில் ஏற்பட்டுவரும் அதிகரிப்பு, இந்த ஆண்டின் சென்மதி நிலுவையில் ஓர் மிகை நிலையை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் எப்போதும் இல்லாத 8.15 பில்லியன் ஐ.அ.டொலரினை வெளிநாட்டு ஒதுக்காக இந்த மாத நடுப்பகுதியில் பதிவுசெய்ய முடிந்துள்ளது. ஒரு நாட்டின் சென்மதி நிலுவையின் மிகை அல்லது வெளிநாட்டு ஒதுக்குகள் அதிகரிக்கும் போது அந்த நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியும் உயர்வடைய வாய்ப்புள்ள நிலையில், இந்த ஆண்டில் ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி 0.96 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. எனினும் இதற்கு ஐ.அ.டொலரின் சர்வதேச பெறுமதியில் ஏற்பட்டுவரும் பலவீன நிலையும் ஒரு காரணம எனலாம்.


# நியூசிலாந்து நாடாளுமன்றில் இலங்கையின் கொலைக்களம்

நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் அரசியற்கட்சி உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த செவ்வாய்க கிழமை சனல்-4 தொலைக் காட்சி ஒளிபரப்பிய இலங்கையின் கொலைக களங்கள் ஆவணப்படம் காண்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை உயர ஸ்தானிகரகம் மற்றும் நியூசிலாந்தில் உள்ள இலங்கை ஆதரவாளர்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் நியூசிலாந்து நாடாளுமன்றில் திரையிடப்பட்டுள்ளது.

பசுமைக்கட்சியை சேர்ந்த கீத் லொக், தொழிற்கட்சியை சேர்ந்த மரியான் ஸ்ட்ரீட் மற்றும் தேசியக் கட்சியைச் சேர்ந்த ஜெக்கி புளூ ஆகியோரால் இந்த ஆவணப்படம் காண்பிக்கப்பட்டுள்ளது. ஆவணப்படத்தில் கொடூரமான காட்சிகளைப் பார்த்த பார்வையாளர்கள் மிகவும் திகைப்புற்றதாகப் பசுமைக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் கீத்லொக தெரிவித்துள்ளார்.

இதனைப் பார்த்த பல்வேறு கட்சி உறுப்பினர்களும் இதில் சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன்னால் நிறுத்தவேண்டும் என்ற மனப்பான்மையைக் காட்டினர் என நியூசிலாந்து ஊடகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொக்காவில் பரிவர்த்தனை விவகாரம் தொலைத்தொடர்பு ஆணையம் விசனம்



(கொழும்பு)

முல்லைத்தீவு கொக்காவிலில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையின் மிக உயர்ந்த தொலைத்தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரத்தைப் பயன்படுத்துவது குறித்து பாதுகாப்பு அமைச்சுக்கும், தொலைபேசி ஒழுங்கமைப்பு ஆணையத்துக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணையம் 700 மில்லியன் ரூபா செலவில் கொக்காவில் தொலைத் தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரத்தை அமைத்திருந்தது.

வடக்கு, கிழக்கு மக்களுக்கான ஒளி, ஒலிபரப்பு தொலைத்தொடர்பு சேவைகளை மற்றும் செல்லிடத் தொலைபேசி உள்ளிட்ட தொலை பேசிச் சேவைகள் வழங்குவதற்காக இந்த கோபுரம் அமைக்கப்பட்டது.

கொக்காவில் கோபுரத்தினைத் தனியார் நிறுவனங்களின் பயன்பாட்டுக்கு வழங்கி வருமானம் பெறுவதினை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. ஆனால் இந்தக் கோபுரம் அமைக்கப்பட்டதும், இராணுவத்தின் சமிக்ஞைப் பிரிவு அதனை இராணுவத் தளமாக்கியுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் உத்தரவுக்கமையவே அது ஒரு இராணுவ வலயமாக்கப்பட்டுள்ளது. அரசாங்கத் தொலைக்காட்சி மற்றும் வானொலியின் பரிவர்த்தனைகளுக்கும், இராணுவப் பயன்பாட்டுக்கும் மட்டுமே கொக்காவில் கோபுரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.தனியார் தொலைக்காட்சி,வானொலி மற்றும் கைத்தொலைபேசி இணைப்பு நிறுவனங்கள் இதனைப் பயன்படுத்த பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்து வருவதால்,இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணையம் வெறுப்படைந்துள்ளது. இதுதொடர்பில் பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும் இதுவரை சாதகமான முடிவு எட்டப்படவில்லை என்று தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணையம் விசனம் வெளியிட்டுள்ளது.

## 4 இலட்சம் ரூபா நகைகள் திருட்டு

(காரைநகர்)

காரைநகர் அலின் வீதியில் உள்ள வீடொன்றில் இருந்து நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் குறித்த வீட்டு உரிமையாளர்கள் நிகழ்வொன்றுக்குச் சென்றுவிட்டு வந்து நகைகளை கழற்றி வைத்துவிட்டு சிறிது நேரத்தின் பின்னர் பார்த்த போது நகைகள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(50)

## பருவப்பெயர்ச்சி மழையை அடுத்து காலபோக நெற்செய்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரங்களில் பரவலாகப் பெய்த பருவப்பெயர்ச்சி மழையை அடுத்து விவசாயிகள் அடுத்த பெரும்போக நெற செய்கைக்கான ஆயத்தப் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வயல் நிலங்களை விவசாயிகள் உழுதும், சீர்படுத்தியும் பசளையிடுவதிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். அநேகமான வயல்களில் காணப்படும் செடிகள் மற்றும் புற்கள் அழிககப்பட்டு தீயிட்டு கொளுத்தப்பட்டும் வருகின்றன.

பெரும்போக நெற்செய்கைக்கான ஆயத்தப் பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் காலபோக நெற்செய்கையின் ஆரம்பப் பணிகளில் விவசாயிகள் ஆர்வமுடன் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வருடம் பருவப்பெயர்ச்சி மழை முன்கூட்டியே ஆரம்பத்திருப்பதை அடுத்து இந்த நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டுகளைவிட கூடிய அளவான பிரதேசங்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்காக இந்த ஆரம்பப் பணிகளை விவசாயிகள் தொடங்கி இருபபது குறிப்பிடத்தக்கது. (வி)

## மூன்று சுகாதார நிலையங்கள் புதுக்குடியிருப்பில் புனரமைப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கைவேலி, கோம்பாவில், வள்ளிபுனம் ஆகிய இடங்களில் இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூன்றும் 60 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்த் தெரிவித்துள்ளார். யுத்த காலத்தில் இந்த சுகாதார நிலையங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருந்தது. இந்த பிரதேசத்தில் இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியேறி வருவதினால் அடிப்படை வசதிகளில் ஒன்றான சுகாதார சேவையைக் கருத்தில் கொண்டு புனரமைப்புப் பணிகள் நடை பெறுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.


## 50 பயனாளிகளுக்கு செயற்கை அவயவம்

(கிளிநொச்சி)

“இளைஞர்களுக்கான நாளை” அமைப்பினூடாக மனித வள மேம்பாட்டு பிரிவினால் செயற்கை அவயவங்களைப் பொருத்தும் நடவடிக்கை கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டு கை மற்றும் கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புக்களைப் பொருத்தும் இந்த செயற்பாட்டில் கிளிநொச்சியில் முதற் கட்டமாக 50 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான செயற்கை அவயவங்களைப் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டில் சென்னை றோட்டறிக் கழகத்தின் மருத்துவர்கள் வருகை தந்து இந்த அவயவங்கள் பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.(28)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று 19ஆம் திருவிழா



ஆடி வரும் அழகில் நீ - நிதம்
அமைதி கொள்ளும் மனம்
தேடி வரும் பக்தர் உள்ளம் - துயர்
சுமையது பஞ்சாய் விலகும்.

**- இ. சிவ உமாகரன், இணுவில்**

முருகா முருகா என்று உனைப் பணிந்தோம் ஐயா!
உருகாதோ கல்மனமும் உன்னருட் காட்சி கண்டே!
வருவாய் வண்ண மயிலேறி வடிவேலா முருகா சண்முகா
தருவாய் நீ இன்னருளைத் தரணியது செழித்திடவே!

**- இராசையா ஸ்ரீதரன்**

நல்லையனே நல் அழகு வேலவனே
நல்லவனே இருதோழி மைந்தனனே
நனைந்த தாமரையில் உதித்தோனே - முருகா
நற்கதி அருளுமையா நாதனே முருகா

**- இருபாலையூர் கவிராயர் தமிழ்.**

## பெண்களும், குழந்தைகளுமே யுத்தத்தினால் அதிகம் பாதிப்பு

### கூறுகிறார் கிளிநொச்சி மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர்

(முரசுமோட்டை)

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் பெண்களும் குழந்தைகளுமே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் கடந்த 19ஆம் திகதி நடைபெற்ற பொலிஸ நடமாடும் சேவையில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், நாட்டில் தொடர்ந்து இடம்பெற்ற யுத்தத்தினால் பெருமளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் எதிர்காலத்தை நல்ல முறையில் அமைக்க வேண்டிய பொறுப்பு எம் எல்லோரிடத்திலும் இருக்கின்றது.

குறிப்பிட்ட சில தீய சக்திகள் மக்களைக் குழப்பி அவர்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்ல முனைகின்றனர்.

இந்த விடயங்களில் மக்கள் விழிப்பாக இருந்து தங்களுடைய எதிர்காலத்தை நல்ல வகையில் அமைக்கக்கூடிய சிந்தனைகளை உள்வாங்க வேண்டும்.

யுத்தத்தினால் உடல் அவயவங்களை இழந்தவர்களுக்கும் குறிப்பாக, மாற்றுவலுவுடையோருக்கு பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்படவிருக்கின்றது. விடிவெள்ளி என்ற ஒரு அமைப்பினூடாக இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர மேலும் தெரிவித்தார். (110)

## 2 பேருந்து தரிப்பு நிலையங்கள் இராணுவத்தினரால் அமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள வத்திராயன், மருதங்கேணி ஆகிய பிரதேசங்களில் இரண்டு பேருந்து தரிப்பு நிலையங்கள் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்துக்கு முன்னாலும், மருதங்கேணி பாடசாலை வீதியின் மருதங்கேணி வடக்கு சந்தியிலும் இந்தப் பேருந்து தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் அவர்கள் போக்குவரத்து நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளும் வகையில் இராணுவத்தினரால் இந்த இரு பேருந்துத் தரிப்பிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

முன்னர் இவ்விடங்களில் இருந்த பேருந்து தரிப்பு நிலையங்கள் கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் முற்றாகச் சேதமடைந்தது. எனினும் அன்றிலிருந்து இன்று வரை இந்த நிலையம் மீளக்கட்டியெழுப்பப்படவில்லை.

தற்போது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு இராணுவத்தினர் இந்தப் பேருந்து தரிப்பு நிலையத்தை அமைந்துள்ளமை நன்மையளிப்பதாக அப்பிரதேச மக்களினால் தெரிவிக்கப்படுகிறது. (38)

## முழுமையாக புனரமைக்கப்படாத கற்சிலைமடு-முத்தையன்கட்டு வீதி

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடு சந்தியிலிருந்து சிலையடி ஊடாக முத்தையன்கட்டு குளத்தை அடையும் பிரதான வீதி முழுமையாக புனரமைக்கப்படாததால் இவ்வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வீதிப் புனரமைப்புப் பணி புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் ஒப்பந்தக்காரரிடம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் ஒரு வருட காலமாகியும் இதுவரை இவ்வீதி செப்பனிடப்படாது கற்கள் பரப்பப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் கிரவல் கொண்டு வீதி செப்பனிடப்பட்ட போது இவ்வீதியால் போக்குவரத்து மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், தற்போது இவ்வீதியில் கற்கள பரப்பப்பட்டுள்ளதால் நடந்துகூட செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இவ்வீதியை முழுமையாகப் புனரமைத்துத் தருமாறு இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (101)

## நல்லூர் இரதோற்சவத்தை முன்னிட்டு நயினா தீவிலிருந்து பஜனை யாத்திரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தன் இரதோற்சவத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் நடைபெறும் நயினா - நல்லூர் திருத்தல பஜனைப் பாத யாத்திரை வழமைபோல் இம்முறையும் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை அடுத்து நயினையிலுள்ள அனைத்து ஆலயங்களையும் தரிசனம் செய்து மறு நாள் காலை நயினை அம்பாள் ஆலயத் தில் நடைபெறும் அபிஷேக பூசை வழிபாட்டுடன் திருத்தல பஜனைப் பாதயாத்திரை ஆரம்பமாகும்.

இதன் பின்னர் பஜனைக்குழு குறிகட்டுவான் ஸ்ரீமனோன மணி அம்பாள் ஆலயம், புங்குடுதீவு சர்வோதயம் சிவயோகம் சுவாமிகள் தியான மண்டபம், ஸ்ரீ முத்துமாரி அம்பாள், புங்குடுதீவு பெருங்காடு மூத்த நையினார் புலம் சித்திவிநாயகர், தென்பெருந்துறை சிவன் ஆலயம், ஆதி வைரவர், கிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தைச் சென்றடையும்.

தொடர்ந்து 26ஆம் திகதி ஆலயங்களை தரிசனம் செய்து 27ஆம் திகதி நல்லூர்க் கந்தன் திருத்தலத்தை வந்தடையவுள்ளது.





இளவாலை எழுச்சியகம் கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட இளவாலை கிராமத்தின் பங்கு மகனும், ஜேர்மனியில் வசிப்பவருமான ஜெயரட்ணம் கொர்னேலியுஸ், இளவாலை யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு ஏ.சி.கிறிஸ்தோப்பர் ஆகியோர் சிறுமிகளின் வரவேற்பு நடனத்துடன் அழைத்து வரப்படுவதையும், யாழ். ஆயர் கட்டடத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைப்பதையும், அதில் கலந்து கொண்ட மக்களையும் காணலாம். (21)

# யாழ். நகர்ப் பகுதியில் கழிவுகளால் துர்நாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையிலுள்ள நடைபாதை வியாபாரக் கடைப் பகுதியில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் அவ்வீதியால் செல்ல முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் நிரந்தரமாக கடைகள் அமைத்து நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களாலேயே இக் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இக் கழிவுப் பொருட்களை அகற்றவேண்டுமென அப்பகுதியால் செல்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எஸ்)

# வரலாற்றுப்பாட ஆசிரியர் இல்லாமையால் 40 இற்கும் மேற்பட்டமாணவர்கள் பாதிப்பு

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் உயர்தர வகுப்பிற்கு வரலாற்றுப் பாடம் கற்பிப்பதற்கான ஆசிரியர் ஒருவர் இல்லாமையால் தாம் இப்பாடத்தைக் கற்க முடியாத ஒரு நிலை காணப்படுவதாக அப்பாடசாலை மாணவர்களால் தெரிவிக்கப்படுகிறது.


தரம் ஒன்று முதல் உயர்தரம் வரையான வகுப்புக்களைக் கொண்ட இப்பாடசாலையில் உயர்தரத்தில் கலைப்பிரிவு மாத்திரமே கற்பிக்கப்படுவதால் அவற்றையே மாணவர்களும் தெரிவு செய்து கற்று வருகினறனர்.

50 மாணவர்கள் உயர்தரத்தில் கற்று வருவதுடன் அதில் 40 மாணவர்கள் வரலாறு பாடத்தைத் தெரிவுசெய்துள்ளதால் இப்பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இல்லாமையால் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்றே கல்வி கற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலை பல துறைகளில் அபிவிருத்தி அடைந்து வரும் நிலையில் சம்பந்தப்பட்ட வலய அதிகாரிகள் கவனம் எடுத்து வரலாறு பாடத்திற்கு ஆசிரியர் ஒருவரை நியமிக்குமாறு இப்பாடசாலை மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (101)

# பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான வரப்பிரசாதமாக குடாநாட்டு புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமையும்

## வைத்திய நிபுணர் ஜெயக்குமாரன்



(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ள சிறுவர் புற்றுநோய் சிகிச்சை நிலையம் வடபகுதியில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது என யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரன் தெரிவித்துள்ளார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற நல்லைக்குமரனின் 19 ஆவது மலர் வெளியீட்டு விழாவில் யாழ. மாநகர சபையினால் சமய சமூக சேவையாளர்களுக்கான விருது வைத்திய நிபுணருக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

விருது பெற்ற பின் உரை நிகழ்த்தும்போதே வைத்திய நிபுணர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் செ.சரவணபவ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாறறுகையில்,

தற்போது யாழ் மாவட்டத்தில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. இவர்கள் சிகிச்சைக்காக மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டிய நிலையுள்ளது.

இந்த நோயாளர்கள் நீண்டதூரம் சென்று சிகிச்சை பெறுவது என்பது பெரும் கஷ்டமானதாகும். எனினும் சிரமத்தின் மத்தியில் சென்று இவர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

குறிப்பாக மகரகம வைத்தியசாலையில் சகோதரமொழியைச் சேர்ந்தவர்களே அதிகம் கடமையாற்றுகின்றனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள நோயாளர்கள் அங்கு மொழிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. தற்போது யாழ் போதனா வைத்தியசாலையில் அமையப் பெறவுள்ள இச்சிகிசசை நிலையத்தினூடாக யாழ்.மாவட்டத்திலுள்ள நோயாளர்கள் சிரமமின்றி சிகிச்சை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றார்.

நடைப்பயணத்தினை மேற்கொண்டு சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கு நிதி திரட்டித் தந்த நடைப்பயணக் குழுவினருக்கும் வைத்திய நிபுணர் இதன் போது நன்றி தெரிவித்தார். (எஸ்)

# திருட்டுக்களை தடுக்கும் வகையில் ரோந்துப் பணியில் இராணுவத்தினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் திருடர்களின் கைவரிசை இரவு வேளையில் அதிகரித்துச் செல்வதையடுத்து, இராணுவத்தினரின் ரோந்துப் பணிகளும் திடீரென முடுக்கிவிடப்பட்டுள்ளன.

திருடர்களின் இந்த கைவரிசையைத் தடுக்கும் முகமாக இராணுவத்தினரினதும், பொலிஸாரினதும் இரவு ரோந்துப் பணிகள் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன.

இரவில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடுவோரை இராணுவத்தினர் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

க..ந்த சில மாதங்களாக குற்றச்செயல்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்ட குடாநாட்டின் அனேகமான இடங்களில் மீண்டும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (வி)

# மின்சாரம் தடைப்படுவதை சாதகமாக்கும் திருடர்கள்

(கோப்பாய்)

நீர்வேலி - கோப்பாய்ப் பிரதேசங்களில் இரவில் மின்சாரம் தடைப்படும் சமயங்களில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகின்றன.

திடீரென மின்சாரம் தடைப்பட்டதும் திருடர்கள் அதைப் பயன்படுத்தி வீடுகளுக்குள் நுழைய முற்படுவதாகவும் அப்போது மக்கள் கூக்குரல் போட்டதும் அவர்கள் தப்பிச் செல்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரத்தில் கோப்பாய் மற்றும் நீர்வேலிப் பகுதியில் இவ்வாறான திருட்டு முயற்சிகளில் திருடர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்தத் திருட்டை முறியடிப்பதற்கு இப்பகுதி இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் இரவில் விழிப்புப் பணியில் ஈடுபட்டும் வருகின்றனர். (வி)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(22.08.2011 – திங்கட்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆவணி 5 ஆம் நாள்.
இராகுகாலம 09.35–9.05, சுபநேரம் 12.05 –1.35
நட்சத்திரம் கார்த்திகை பி.ப 12.33 வரை
திதி அட்டமி பி.ப 1.29 வரை, ஸ்ரீ கிருஸ்ண ஜெயந்தி.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணக்கஷ்டம், தேக சுகக்குறைவு, அமைதியின்மை, தேழப்போதல், இனசன அழைப்பு.

**ரிஷபம்:**– தேக ஆரோக்கியம், பண வரவு, தெய்வ தரிசனம், மன மகிழ்ச்சி, விருந்துபசாரம்.

**மிதுனம் :**– பணக் கஷ்டம், தெய்வ தரிசனம், கடன்தொல்லை, தொழில் முடக்கம், மனக் கவலை.

**கடகம்:**– அதிகாரப் போட்டி. பணவரவு, தேக ஆரோக்கியம், பெரியோர் பாராட்டு, நினைத்ததைச் சாதித்தல்.

**சிம்மம்:**– பணக்கஷ்டம், வீண் அலைச்சல், கடவுள் வழிபாடு, உறவினர் வருகை, மனக் கவலை.

**கன்னி :**– உடல் உபாதை, பண வரவு, அதிகாரப் போட்டி, மனமகிழ்ச்சி, தானதர்ம சிந்தனை.

**துலாம் :**– பணக் கஷ்டம், வீண் அலைச்சல், மனக் கவலை, தேக சுகக் குறைவு, பிணக்குத் தீர்தல்.

**விருச்சிகம்:**– தொழில் விருத்தி, பண வரவு, மனச்சந்தோஷம், தேக ஆரோக்கியம், பிணக்குத் தீர்தல்.

**தனுசு:**– பணக் கஷ்டம், நினைந்ததைச் சாதித்தல், தேக சுகம் பாதிப்பு, மனச் சஞ்சலம், வீண் அலைச்சல்.

**மகரம்:**– தர்மசிந்தனை, பண வரவு, தேக ஆரோக்கியம், வீணாக ஆத்திரப் படல், வசதிக்குறைவு.

**கும்பம் :**– பணக் கஷ்டம், வீண் அலைச்சல், தொழில் முடக்கம், மனக் கவலை, தெய்வ தரிசனம்.

**மீனம்:**– தொழில் விருத்தி, பண வரவு, நினைத்ததைச் சாதித்தல், சபையில் வரவேற்பு, உற்சாகம்.

# சமாதானத்தை வலியுறுத்தி கிறிஸ்தவ அமைதிப் பேரணி

(யாழ்ப்பாணம்)



நாட்டில் சமாதானத்தை வலியுறுத்தி பெந்தக் கோஸ்தே கிறிஸ்தவ சபை நேற்று யாழ்ப்பாணத்தில் அமைதி ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பகல் 11.00 மணிக்கு இராசாவின் தோட்டத்திலுள்ள கிறிஸ்து இராசாவின் தோட்டத்திலுள்ள கிறீஸ்தவ சபையிலிருந்து ஆரம்பித்து ஆஸ்பத்திரி வீதி வழியாக இப்பேரணி யாழ். நகரை சென்றடைந்து மீண்டும் அங்கிருந்து ஸ்ரான்லி வீதி வழியாக மீண்டும் பெந்தக்கோஸ்தே கிறிஸ்தவ சபையை வந்தடைந்தது.

இப்பேரணியில் ஈடுபட்டோர் அமைதியை வலியுறுத்தும் பதாகையைத் தாங்கி இருந்தனர். அப் பதாகைகளில் சமாதானத்தை வலியுறுத்தும் வாசகங்களுடன் சமய வாசகங்களும் காணப்பட்டன.

சமாதானத்தை வலியுறுத்தும் வெள்ளை நிற அங்கி அணிந்து சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர். (எஸ்)

# முழுமையாக செப்பனிடப்படாத வீதியால் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் பயணிகள்

(காரைநகர்)

காரைநகர் பிரதான மேற்கு வீதி முழுமையாக செப்பனிடப்படாததால் இவ் வீதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனச் சாரதிகளும், பொதுமக்களும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அவ்வீதியால் பயணிப்போர் அடிக்கடி விபத்துக்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கடந்த வருட பருவ மழையினால் மிகமோசமாக சேதமடைந்த இவ்வீதி ஆங்காங்கே செப்பனிடப்பட்டது. எனினும் இதுவரை முழுமையாக இவ் வீதி செப்பனிப்படாததால் இவ்வீதியால் செல்லும் வாகனங்கள் பள்ளங்கள் என பாரத்து ஒன்றை ஒன்று விலத்திச் செல்லும் போது விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலையும் காணப்படுவதாக வாகன சாரதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இரவு பகல் என நாளாந்தம் இவ்வீதியூடாக அதிகளவு மக்கள் பிரயாணம் செய்து வரும் நிலையில் இவ்வீதி புனரமைக்கப்படாது இருப்பது தமக்கு வேதனை அளிப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இனிவரப்போகும் மழை காலத்துக்கு முன்னராவது இவ்வீதியைப் புனரமைக்க பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பிரதேச பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (50)



# நினைத்ததைச் சாதிப்பதற்கு அவசியமானது ஊக்குவிப்பு

## கூறுகிறார் வலைப்பந்து அணி வீராங்கனை தர்ஷினி

(யாழ்ப்பாணம்)

ஊக்குவிப்பு என்பது முதலில் எங்கள் மனதில்தான் உருவாகவேண்டும். இவ்வாறு ஊக்குவிப்பு எமது மனதில் எழும் பட்சத்தில் நாம் நினைத்ததைச் சாதிக்க முடியும் என இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் நட்சத்திர வீராங்கனையும் தமிழருமான தர்ஷினி தெரிவித்தார்

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த உலகக் கிண்ண வலைப்பந்தாட்டத் தொடரில் பங்குபற்றிய எமது அணி போதிய தயார்ப்படுத்தலின்றியே எதிரணிகளுடன் மோதவேண்டிய நிலை ஏற்பட்டது.

தோற்கும் அணியில் இருக்கும் என்னால் அதிக கோல் போட முடிந்தது என்றால் எங்கள் அணி கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் குடிகொண்டதே இதற்கு முக்கிய காரணம்.

ஊக்குவிப்பு என்பது எங்கள் மனதில் தான் முதலில் உருவாக வேண்டும். நாம் நினைத்த இலக்கை ஒருபோதும் தாழ்த்தக்கூடாது.

தற்போதைய நிலையிலும் எங்கள் ஊடகங்கள் கிரிக்கெட்டுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. கிரிக்கெட்டைப் போல் எல்லா விளையாட்டுக்களுக்கும் அவர்கள் ஊக்குவிப்புக் கொடுக்க வேண்டும்.

அப்பொழுதுதான் ஏனைய விளையாட்டுக்களிலும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இளம் வீரர்களுக்கு உருவாகும். உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடி எனக்கு ஆக்சூஞ் நகுஞ்க்சு விருது கிடைத்தது. இதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது உயரம், உடலமைப்பு போன்றவையே நான் அதிகமான கோல்களைப் போடக் காரணமாக அமைந்தது.

என்னுடைய வெற்றிக்குப் பக்கபலமாக இருந்த அனைவருக்கும் இவ்விடத்தில் நன்றி கூறுகின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.



## விளையாட்டுச் செய்திகள்

### தேசிய தடகள விழா வரும் மாதம் கொழும்பில்

(யாழ்ப்பாணம்)

தேசிய தடகள விழா அடுத்த மாதம் கொழும்பில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய தடகள சம்மேளன வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

இப்போட்டிகள் அடுத்த மாதம் 08ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடாத்தத் தீர்மானிக்கபட்டுள்ளதாகவும், இதில் நாடு பூராகவுள்ள சகல தடகள வீர, வீராங்கனைகள் பங்குகொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எஸ்)

## சக்திவேல் கால்பந்தாட்டத் தொடர் அரையிறுதிக்கு 4 அணிகள் தகுதி

(வடமராட்சி கிழக்கு)

கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகத்தினால் வடமராட்சி கிழக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட தொடரின் அரையிறுதிக்கு மணற்காடு சென் அன்ரனீஸ் 'ஏ', ஆழியவளை அருணோதயா, கட்டைக்காடு சென் மேரிஸ், மணற்காடு சென் அன்ரனீஸ் 'பி' அணிகள் தகுதிபெற்றுள்ளன.

நேற்று முன்தினம் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமான முதலாவது போட்டியில் வத்திராயன் உதயசூரியன் 'ஏ' அணியை எதிர்த்து கட்டைக்காடு சென் மேரிஸ் 'ஏ' அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியதும் இரு அணிகளும் கடுமையாக போட்டியிட்டனர். இருந்தும் வத்திராயன் உதய சூரியன் அணி கோல் காப்பாளரின் கவனக் குறைவால் கட்டைக்காடு சென் மேரிஸ் அணி 20ஆவது நிமிடத்தில் ஒரு கோல் போட்டது. அதனைத் தொடர்ந்து கட்டைக்காடு சென் மேரிஸ் அணி தனது ஆட்டத்தை மேலும் வேகப்படுத்தியதுடன் கோல் போடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இருந்தும் ஆட்டத்தின் முதல் பாதி முடிவடைந்த நிலையில் ஒரு கோலை மட்டும் போட முடிந்தது. இடைவேளைக்குப் பின்னர் சென் மேரிஸ் அணியினர் மிகவும் சாதுரியமாக பந்தை முன்னோக்கி நகர்த்தி. மேலும் இரண்டு கோல்களைப் போட்டு 3-0 என்ற நிலையில் முன்னிலை பெற்றது. சென் மேரிஸ் அணி கோல்கர்பாளர் பகுதியில் அவர்களின் பின்களத் தடுப்பு வீரர் கையில் பந்து பட்டதால் தண்ட உதை உதயசூரியன் அணிக்கு வழங்கப்பட்டது.

அந்த தண்ட உதையினை உதயசூரியன் அணியின் முன்வரிசை ஆட்ட வீரர் சதீஸ் சரியாகப் பயன்படுத்தி அதனைக் கோலாக மாற்றினார். இதன் பின்னர் சென் மேரிஸ் அணி கோல் போட முயற்சித்தும் ஆட்டம் முடியும் வரை கோல் எதனையும் போல பலன் கிடைக் காமல் போட்டி நிறைவுக்கு வந்தது.

கட்டைக்காடு சென் மேரிஸ் அணி வத்திராயன் உதயசூரியன் அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டி மாலை 4.30 மணிக்கு ஆழியவளை அருணோதயா 'ஏ' அணிக்கும் வெற்றிலைக்கேணி அணிக்குமிடையில் இடம்பெற்றது.

இதில் ஆட்டம் முடியும் வரை இரு அணிகளுமே கடுமையாக மோதிய நிலையில் கோல் எதனையும் போட முடியவில்லை.

ஆட்டம் முடிந்தவுடன் சமநிலை உடைப்பு மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் அருணோதயா அணி சென் செபஸ்தியர் அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மாலை 5.30 மணிக்கு நடைபெற்ற மூன்றாவது போட்டியில் மணற்காடு சென் அன்ரனீஸ் 'ஏ' அணியை எதிர்த்து செம்பியன்பற்று பிலிப்பினேரியர் அணி மோதியது.

இதில் கடுமையாக இரு அணிகளும் கோல் போடும் முயற்சியில் ஈடுபட்டது. ஆட்டம் முடிவில் மணற்காடு சென் அன்ரனீஸ் 'ஏ' அணி செம்பியன்பற்று பிலிப்பினேரியர் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நேற்றுக் காலை 8.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் உடுத்துறை பாரதி 'ஏ' அணியை எதிர்த்து மணற்காடு சென் அன்ரனீஸ் 'பி' அணி மோதியது.

இதில் இரு அணிகளும் கோல் எதனையும் போடாத நிலையில் சமநிலை உடைப்பு மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மணற்காடு சென் அன்ரனீஸ் 'பி' அணி உடுத்துறை பாரதி 'ஏ' அணியை 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவது போட்டியில் ஆழியவளை அருணோதயா அணியும், நாகர்கோயில் தமிழ்ஒளி அணியும் மோதவிருந்த நிலையில், நாகர்கோயில் தமிழ்ஒளி அணி சமூகம் கொடுக்கமையால் அருணோதயா அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

மணற்காடு சென் அன்ரனீஸ் அணியை எதிர்த்து ஆழியவளை அருணோதயா அணியும், கட்டைக்காடு சென் மேரிஸ் அணியை எதிர்த்து மணற்காடு அன்ரனீஸ் 'பி' அணியும் அரையிறுதியில் மோதவுள்ளன.

## தும்பளை மென்பந்தாட்டத் தொடர் முதல் போட்டியில் மகேசன் வெற்றி

(தும்பளை)

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழக முன்னாள் வீரர் அமரர் இ. பிரபாகரன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டுவரும் மென்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் முதல் போட்டியில் மகேசன் அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

மாதனை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற முதலாவது போட்டியில் மகேசன் அணி வீனஸ் அணியுடன் மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வீனஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப வீரர்களாக களமிறங்கியோர் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். இருப்பினும் நடுவரிசை வீரர்கள், அணியை கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற துணைபுரிந்தனர். இறுதியில் 14 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 56 ஓட்டங்களை வீனஸ் அணி பெற்றது. இதில் ஜெகன் 13, நிரோசன் 9 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய மகேசன் அணி 10 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் ரதீஸன் மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 23 ஓட்டங்களையும், அரவிந்தன் ஏழு ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர்.

தொடர்ந்தும் போட்டிகள் நடைபெற்று வருகின்றது.


இப்போட்டித் தொடரின் ஏனைய ஆட்டங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், போட்டித் தொடரில் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும், ஆட்டநாயகன் விருதும் வழங்கப்படும் என்றும் போட்டி ஏற்பட்டாளர்கள் தெரிவித்தனர். (62)

### மூன்று வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால்


## நீர்கொழும்பு சென் செபஸ்ரியன் கல்லூரியை 11 ஓட்டங்களால் வென்றது சென் பற்றிக்ஸ்



அஜித் டார்வின்



ஜே.கிளின்ரன்



ரி.மோறிஸ்

(யாழ்ப்பாணம்)

மொரிஸ், லவிங்ரன், அஜித் டார்வின் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நீர்கொழும்பு சென் செபஸ்ரியன் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 11 ஓட்டங்களால் த்ரில் வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பிரிவு இரண்டின், இரண்டாவது சுற்று ஆட்டத்திலேயே சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இரு கல்லூரிகளின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இப்போட்டி கடந்த 18ஆம் திகதி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி, மொரிஸ், லிவிங்ரன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி, 40.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொரிஸ் இரண்டு சிக்ஸர்கள், 11 பவுண்டரிகள் அடங்கலாக 74 ஓட்டங்களையும், லிவிங்ரன் 60 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் உடர நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய சென் செபஸ்ரியன் கல்லூரி 48.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 193 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் டகிரு டில்சான் 72, ரவிந்து துசாந் 25, ஜெனகப் பிரியா 22 ஓட்டங்களையும் பெற்றனர். மிகச் சிறப்பாக பந்து வீசிய அஜித் டார்வின் 10 ஓவர்களில் 20 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

# பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார் வக்கார்!



(ஹராரே)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் வக்கார் யூனிஸ் அப்பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளார். எனினும் இம்மாதம் நடைபெறவுள்ள சிம்பாப்வே சுற்றுலாவரை அப்பதவியில் தான் நீடிப்பார் எனவும் அவர் கூறியுள்ளார்.

கிரிக்கெட் சபைக்கு எனது இராஜினாமா குறித்து கடந்த வாரம் அறிவித்தேன். சிம்பாப்வே சுற்றுலாவே எனது கடைசி சுற்றுலாவாக இருக்கும் எனவும் செய்தியாளர் மாநாடொன்றில் வக்கார் யூனிஸ் கூறினார்.

எனினும் தனது இராஜினாமாவுக்கு மருத்துவ பிரச்சினைகள் உட்பட தனிப்பட்ட விடயங்களே காரணம் எனவும் கிரிக்கெட் சபையுடன் முரண்பாடுகள் எதுவும் இல்லை. எனது மனைவியினதும் எனது ஆரோக்கியம் நன்றாக இருந்திருந்தால் நான் இந்த தீர்மானத்தை மேற்கொண்டிருக்க மாட்டேன். எனது பதவிக்காலத்தில் ஸ்பொட்பிக்ஸிங் குற்றச்சாட்டு உட்பட பல சர்ச்சைகள் நிலவின. ஆனால் இப்பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இந்த இளைஞர்கள் சிறப்பாக செயற்பட்டமை குறித்து பெருமையடைகிறேன்.

நேற்று முன்தினம் காலையில்தான் அணி வீரர்களிடம் எனது இராஜினாமா குறித்து அறிவித்தேன். அப்போது அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். ஏனெனில் இவ்வளவு நாள் இவ்விடயம் எனக்கும் கிரிக்கெட் சபைக்கும் மாத்திரமே தெரிந்திருந்தது எனவும் வக்கார் யூனிஸ் கூறினார்.

39 வயதான வக்கார் யூனிஸ், கடந்த வருடம் மார்ச் மாதம் பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக பதவியேற்றார்.

பாகிஸ்தான் வீரர்கள் மூவர் ஸ்பொட்பிக்ஸிங் எனும் ஆட்டநிர்ணய சதிக் குற்றச்சாட்டில் சிக்கி வீரர்கள் மூவருக்கு தடை விதிக்கப்பட்டமை, வீரர்களுடனான அபிப்பிராய பேதங்கள், ஒருநாள் போட்டிகளுக்கான முன்னாள் அணித்தலைவர் வக்கார் யூனிஸுடனான முரண்பாடு என பல சர்ச்சைகளை அவர் தனது பயிற்றுநர் பதவிக்காலத்தில் எதிர்கொண்டார்.

## சின்சினாட்டி ஒப்பன் நடால், பெடரர் அவுட்



(சின்சினாட்டி)

சின்சினாட்டியில் நடைபெற்று வரும் வெஸ்டர்ன் அண்ட் சதர்ன் ஓப்பன் சர்வதேச டென்னிஸ் தொடரின் காலிறுதிப் போட்டியில் நடால் மற்றும் பெடரர் அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளனர். இதே வேளை, ரஷ்யாவின் ஷரபோவா மற்றும் இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த காலிறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் 2ஆம் நிலை வீரர் ரபெல் நடால் 7ஆம் நிலை வீரர் மார்டி பிஷ்சை சந்தித்தார். இந்த ஆட்டத்தில் ரபெல் நடால் 3-6, 4-6 என்ற நேர் செட்டில் மார்டி பிஷ்சிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் உலகின் 3ஆம் நிலை வீரரான ரோஜர் பெடரர் 2-6, 6-7 (3-7) என்ற நேர்செட்டில் 9ஆம் நிலை வீரர் தாமஸ் பெர்டிச்சிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

ஆண்கள் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி செக் குடியரசின் தாமஸ் பெர்டிச், ராடக் ஸ்டிபனக் ஜோடியை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் அவுஸ்ரேலியாவின் .சமந்தா ஸ்டோசுரை வீழ்த்தி ரஷ்யாவின் மரிய ஷரபோவா அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இப்போட்டியில் தோல்வியடைந்த நடால் கருத்து தெரிவிக்கையில், மிகுந்த மனவேதனையைத் தருவதாக அமைந்தாகவும், இருப்பினும் அமெரிக்கன் ஓப்பனில் சாதிக்கும் முழு உறுதிபூண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## முதல் ஆட்டம் அயர்லாந்துடன்


(லண்டன்)

இந்திய - இங்கிலாந்து அணிகள் இடையிலான ஒரு நாள் போட்டித் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் அயர்லாந்து அணிக்கெதிரான 50 ஓவர் கொண்ட ஒரு போட்டியில் இங்கிலாந்து அணி ஆடவுள்ளது.

இப்போட்டிக்கு அனுபவம் வாய்ந்த பல வீரர்களுக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளதுடன் அணியின் தலைவராக இயன் மோர்கன் தெரிவாகியுள்ளார்.

இதன்படி அணி விபரம் வருமாறு: இயன் மோர்கன் (கப்டன்), ஜோனதன் பையர்ஸ்டோவ், ரவிபோபரா, ஸ்கொட் போர்த்விக், டர்ன்பாச், ஸ்டீவன் பின், கீஸ்வெட்டர், கிரகாம் ஓனியன்ஸ், சமித் பட்டேல், பென் ஸ்டோக்ஸ், ஜேம்ஸ் டெய்லர், ஜோனதன் டிரோட், கிறிஸ் வோக்ஸ். இப்போட்டி டப்லினில் எதிர் வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இங்கிலாந்திற்கு எதிரான தொடரை கடினமாகக் கொள்ளாத ஸ்ரீசாந்த்



(லண்டன்)

இங்கிலாந்துக்கு எதிரான தொடரை, இந்திய அணி இழந்தாலும், இத்தொடர் கடினமான தொடராகத் தெரியவில்லை என, இந்திய வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரீசாந்த் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்து, தர வரிசைப் பட்டியலில் முதல் நிலை இடத்தை இழந்திருந்தாலும், இத்தொடர் கடினமாக தெரியவில்லை. இதை விட கடினமான சவால்களையெல்லாம் இந்திய அணி எதிர் கொண்டுள்ளது. 2008இல் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடர், இதனை விட கடினமாக இருந்தது.

தற்போதைய டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. நான்காவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆரம்பத்தில், நாங்கள் சிறப்பாக பந்து வீசினோம். உணவு இடைவேளைக்குப் பின் பந்துவீச்சு பயன்தரவில்லை.

இங்கில்லாந்து துடுப்பாட்ட வீரர்கள் எப்படிப்பட்ட பந்து வீச்சையும் சிறப்பாக எதிர்கொள்கின்றனர். இவர்களுக்கு எதிராக பந்துவீசுவது சவாலாக உள்ளது. இத்தொடர் எங்களுடைய பலத்தைப் பற்றி அறிய உதவியாக உள்ளது. இருப்பினும், இரு அணிகளுக்கும் இடையிலான தொடர் ரசிக்கும்படியாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

## வாழ்க்கையை கெடுத்த சப்பல் மனம் வெதும்புகிறார் கங்குலி



(லண்டன்)

இந்திய அணிக்கு பயிற்சியாளராக இருந்து, என் வாழ்க்கையை கெடுத்தவர் கிரேக் சப்பல் என காரசாரமாக கூறியுள்ளார் கங்குலி.

அவுஸ்ரேலிய அணியின் தேர்வுக் குழுத் தலைவர் ஹில்டிச், முகாமையாளர் சப்பலை அப்பதவியிலிருந்து அதிரடியாக அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை நீக்கியதைத் தொடர்ந்தே கங்குலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய அணியின் பயிற்சியாளராக சப்பல் இருந்த போது பல சர்ச்சைகள் ஏற்பட்டன. அணித் தலைவராக இருந்த எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. நான் பயிற்சிக்கு முறையாக வருவதில்லை, சப்பல் சொல்வதை கேட்பதில்லை என அடுக்கடுக்காக தவறான புகார்களைக் கூறினார்.

ஆனால், இப்போது மக்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள். யார் நல்லவர், யார் கெட்டவர் என்று. அவுஸ்ரேலிய கிரிக்கெட் நிர்வாகம், சப்பலுக்கு சரியான பாடம் புகட்டியுள்ளது.

கிரிக்கெட்டில் அரசியலைப் புகுத்தி, எனது கிரிக்கெட் வாழ்க்கையை அவர் கெடுத்து விட்டார். சப்பல் நல்ல கிரிக்கெட் வீரர், அவருக்கு நல்ல பெயர் உண்டு. அவர் நடந்து கொண்ட விதம் துரதிஷ்டவசமானது எனவும் கங்குலி தெரிவித்தார்.

2005/06ஆம் ஆண்டில் சப்பலுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடால் கங்குலியின் அணித் தலைவர் பதவி பறி போனது, அதன் பிறகு அணியில் அவர் இடம் பெற முடியாமலேயே போனமை குறிப்பிடத்தக்கது

## இந்திய அணியின் தொடர் தோல்வி வருத்தமடைகின்றார் ஹேர்ஸ்டன்



(ஜோகனஸ்பேர்க்)

இங்கிலாந்து தொடரில் இந்திய கிரிக்கெட் அணி, தொடர் தோல்விகளைச் சந்தித்திருப்பது சிறிய வருத்தத்தை ஏற்படுத்தியிருப்பதாக முன்னாள் பயிற்சியாளர் ஹேர்ஸ்டன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி இங்கிலாந்திடம் சரணடைந்து தரவரிசையில் முதல் இடத்தை இழந்திருப்பது வருத்தத்தையும், ஆச்சரியத்தையும் அளிக்கிறது. ஆனால் இந்திய அணி தொடர்ந்து இது போன்று விளையாடாது.

தொடர்ச்சியாக பெரிய அளவில் ஓட்டம் குவிப்பது கடினமானது. குறிப்பாக வீரர்கள் காயமடையும்போது அவர்களுக்குப் பதிலாக மாற்றுவீரர்கள் இடம்பெறும் நேரங்களில் மிகப்பெரிய ஓட்டங்களைக் குவிப்பது மிகவும் கடினமானது. தொடர்ச்சியாக வெற்றி பெறுவது அவ்வளவு எளிதானதல்ல.

முதலிடத்தைப் பிடிப்பதும், அதை தக்கவைத்துக் கொள்வதும் மிகவும் கடினமானது. பந்து வீச்சில் எப்போதுமே குறைபாடு உள்ளது. ஆனாலும் அதை வைத்தே கடந்த காலங்களில் அவர்கள் சிறப்பாக விளையாடினர்.

இந்திய அணி டெஸ்ட் தொடரில் தோல்வியடைந்ததால் எல்லாம் முடிந்துவிடவில்லை. இன்னும் ஒருநாள் தொடர் இருக்கிறது. அதில் சிறப்பாக ஆடி வெற்றி பெற்று தாங்கள் உலக சம்பியன் என்பதை இந்திய அணி நிரூபிக்கும். அடுத்து வரும் ஒரு நாள் தொடரில் நிச்சயம் இந்திய அணி வெல்லும் எனவும் அவர் தெரிவித்தார்.

## அதிகரித்த பயிற்சிப் போட்டி பரிசீலிக்கிறது அவுஸ்ரேலியா

கூடுதல் பயிற்சி போட்டிகள் வேண்டும் என்ற இந்திய கிரிக்கெட் சபையின் வேண்டுகோளை கிரிக்கெட் அவுஸ்ரேலியா (சி.ஏ.,) பரிசீலனை செய்து வருகிறது. வரும் டிசம்பர் மாதம் அவுஸ்ரேலியா செல்லும் இந்திய அணி, டெஸ்ட் தொடரில் ஆடவுள்ளது. இதற்கு முன்னர் அதிகமான பயிற்சிப் போட்டிகளில் இந்திய அணி விளையாடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்திய கிரிக்கெட் சபையால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

இது குறித்து அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ஏற்கனவே போட்டிகளுக்குரிய அட்டவணைகள் முடிவு செய்யப்பட்ட நிலையில், இதில் மாற்றம் செய்வது என்பது கடினமானது என்பதை புரிந்து கொள்ளவேண்டும். ஆனால், பி.சி.சி.ஐ.,யுடன் நாங்கள் எப்போதும், இணக்கமான நட்பு கொண்டுள்ளோம். இதனால், அவர்களது வேண்டுகோளை நிறைவேற்ற, ஏதாவது வேறு வழியுள்ளதாக என்று பரிசீலிப்போம், என்றார்.

# இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் மக்கள் நலன் கருதி செயலாற்ற வேண்டும்

## அமைச்சர் குமார வெல்கம



(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மக்கள் நலன் கருதி தமது பணிகளை முன்னெடுக்க வேண்டும் என போக்குவரத்துத்துறை அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார். புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபை சேவையாளர்களுக்கான நியமனங்களை வழங்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போக்குவரத்துச் சபையானது, இலாபம் தேடும் நிறுவனம் இல்லை மக்களுக்கான சேவையை வழங்கும் நிறுவனமாகவே செயற்படுகின்றது. எனினும், தனியார் பேருந்து சேவைகளில் பணியாற்றுபவர்களிடம் எந்தவித முறையான செயற்பாடுகளும் இல்லை. அவர்கள் இலாபத்தை கருத்தில் கொண்டு மக்களுக்கான சேவையை மட்டுப்படுத்த எண்ணுகின்றனர். போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மக்கள் நலன் கருதி உரிய நேரத்தில் தமது பணிகளை முன்னெடுக்க வேண்டும். தனியார் பேருந்து உரிமையாளர்களை போன்றல்லாது, நற்பழக்க வழக்கங்களுடன் சேவையாற்ற வேண்டும் என்றார்.

# விரிவுரையாளர்களின் வேதனப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வுக்குழு நியமிக்கப்படவில்லை



(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் வேதனப் பிரச்சினைக்கு தீர்வு பெற்று கொடுப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட குழு இதுவரை நியமிக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டினை பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனத் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி முன்வைத்துள்ளார்.

அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் தமது வேதனப் பிரச்சினைக்கு தீர்வு பெற்று கொடுக்கப்பட வேண்டுமாயின் இந்தக் குழுவின் யோசனை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் நிதியமைச்சிடம் கையளிக்கப்பட வேண்டும். இந்தக் குழுவை உடனடியாக நியமிக்குமாறு உயர்கல்வியமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு அரசாங்கத்தின் உரிய பதில் கிடைக்காவிடின் கைவிடப்பட்ட தொழிற்சங்கப் போராட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றார்.

# உதவியாளர்கள் நியமனம்

(கொழும்பு)

சகல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் தமது அமைச்சுக்கான உதவியாளர்களை நியமிக்கவுள்ளதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இதன் மூலம் மொழி கற்றுகொள்ளும் நடவடிக்கை உரிய வகையில் நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. விரைவில் நியமனங்கள் வழங்கப்பட்டு அவர்கள் பதவிகளை பொறுப்பேற்கவுள்ளனர் என்றார்.

# இலங்கையில் சமாதானம் நிலவுவதற்கு நீதியான அரசியல் தீர்வு அவசியம்

## மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்

(கொழும்பு)

**இலங்கையில் யுத்தத்தினால் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை ஆட்சியாளர்கள் உணர்ந்து, நீதியான அரசியல் தீர்வுத் திட்டத்தை வழங்க முன்வந்தாலே நாட்டில் நிலைத்திருக்கக் கூடிய சமாதானத்தையும் ஐக்கியத்தையும் எதிர்பார்க்க முடியும் என்று மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.**



அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்துடன் இந்தப் பிரச்சனையை அணுகி, மக்கள் சுதந்திரமாக நடமாடும் சூழலை உறுதிப்படுத்த நாட்டின் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அருட்தந்தை ஜிம் பிரவுண் காணாமல் போய் 5 ஆண்டுகள் பூர்த்தியான நிலையில், அவரது நினைவாக மன்னாரில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.


யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி தேவாலயத்துக்கு பூசைக்காக சென்றிருந்த போது கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் அருட் தந்தை ஜிம் பிரவுணும் சக ஊழியரும் காணாமற்போனார்கள். அவரது நிலமையை கண்டறிவதற்காக யாழ் ஆயரால் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டும் எவ்வித பலனும் கிட்டவில்லை அவர் காணாமற்போன சம்பவத்தின் பின்னணியில் இருப்பவர்களை கண்டறிவதில் அதிகாரிகளிடத்தில் தொடர்ச்சியாக அசமந்தப் போக்கே காணப்பட்டு வந்தது.

யுத்த காலத்தில், காணாமற்போன ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்பிலும் இதுதான் நிலைமையாகவுள்ளது. ஐ.நா குழுவோ அல்லது வேறு எந்த தரப்போ யுத்த காலத்துச் சம்பவங்கள் பற்றி சுட்டிக்காட்டும் விடயங்களில் என்ன உண்மை இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்கு அதிகாரிகள் முயற்சிக்காமல் அவற்றை பொதுவாக நிராகரித்துவிடும் போக்கு தவறானது.

கற்றறிந்த பாடங்கள் பற்றி ஆராயும் ஆணைக்குழு மூலம் நன்மை கிட்டும் என்ற நம்பிக்கையுடனேயே அதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறோம் நாட்டை ஆள்பவர்களிடத்தில் மன ரீதியான மாற்றங்கள் ஏற்பட்டு அவர்களின் கவனம் மக்கள் பக்கம் திரும்பினால் மட்டுமே உண்மையான சமாதானத்தை எதிர்பார்க்க முடியும் என்றும் தெரிவித்தார்

# கொழும்பு வருமாறு அழைக்கப்பட்டதற்கு ஜெயலலிதாவிடம் இருந்து பதில் இல்லை

## வெளிவிவகார அமைச்சு



(கொழும்பு)

கொழும்புக்கு வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்புக்கு தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதாவிடம் இருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

போருக்குப் பிந்திய நிலைமைகள் குறித்து நேரில் அறிந்து கொள்வதற்கு கொழும்புக்கு வருமாறு தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் அழைப்பு விடுத்திருந்தார்.

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவர் மூலம் இந்த அழைப்புக் கடிதம் நேரில் தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதாவிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசுக்கு எதிரான போக்கை தமிழ்நாட்டு முதல்வர் தீவிரப்படுத்தியதை அடுத்தே, இலங்கை அரசு ஒரு இராஜதந்திர நகர்வாக இந்த அழைப்பை அனுப்பியது.

ஜனாதிபதியின் அழைப்புக்கு தமிழ்நாட்டு முதல்வரிடம் இருந்து எந்தப் பதிலும் அனுப்பிவைக்கப்படவில்லை. எனினும் இந்த அழைப்புக்கான பதிலை இலங்கை அரசாங்கம் உடனடியாக எதிர்பார்க்கவில்லை என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன.

ஜெயலலிதா இப்போது தான் ஆட்சிக்கு வந்துள்ளதாகவும், அவர் இந்த அழைப்பை ஏற்றுக் கொள்வது தொடர்பாக மத்திய அரசுடன் ஆலோசிக்க வேண்டும் என்பதால் அதற்கு காலம் தேவைப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அழைப்பை தமிழ்நாட்டு முதல்வர் ஜெயலலிதா ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கை அரசாங்கத்துக்கு இன்னமும் இருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

# நன்னடத்தை கைதிகளுக்கு 14 நாட்கள் விடுமுறை

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் சிறந்த நடத்தையுடன் செயற்படும் கைதிகளுக்கு வழங்கப்படும் வீடுகளுக்கு சென்றுவருவதற்கான விடுமுறையை 14 நாட்களாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

தற்போது அந்த விடுமுறை 7 நாட்களுக்கு மாத்திரம் நடைமுறையில் உள்ளது.

இதன்டிப்படையில் இரண்டாம் கட்டமாக 10 நாட்கள் விடுமுறையும், 3 ஆம் கட்டமாக 14 நாட்கள் விடுமுறையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், அவர்களை அனுமதிப் பத்திரத்தின் அடிப்படையில் விடுவிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே எழுப்பப்பட்ட பல முறைப்பாடுகளுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் நன்நடத்தையுடன் செயற்படும் சிறைக்கைதிகளின் பெயர்ப் பட்டியலையும் காட்சிப்படுத்த எண்ணியுள்ளதுடன், அது ஏனையோருக்கு ஒரு முன்னோடியாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பொய் கூறி உதவிப்பணம் பெற்ற இங்கிலாந்தவருக்குச் சிறை

(கொழும்பு)

இலங்கையில் இருந்துகொண்டு இங்கிலாந்தில் வசிப்பதாக பொய் கூறி இங்கிலாந்திடம் உதவிப் பணம் பெற்ற ஒருவருக்கு 12 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


இவர் இங்கிலாந்தில் உள்ள மேற்கு யோக்கின் பிறட்.'.போட்டின் இருமாடி வீட்டில் வசித்ததாகப் பொய் கூறி 3 வருடங்களிற்கு நகரசபை உதவிப் பணத்தையும் அங்கவீனமுற்ற உதவித்தொகையையும் பெற்றுள்ளார்.

60 வயதான பிறயன் ஹைலி, தனது இங்கிலாந்து வீட்டினை விற்றதை எவருக்கும் தெரியப்படுத்தாமலிருந்தார். இவ்வாறு இவர் பெற்ற 70,000 பவுண் பணத்தினையும் திருப்பிச்செலுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பணத்தை அபகரிக்கும் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கெதிராக இவரது சட்டவாளர் ஆதாரத்தைக் காட்டியிருந்தாலும் அதனை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இவர் 2001இல் இதயநோயினால் சட்டரீதியாக உதவிப்பணம் பெற்றுவந்தார். அதன்பின் 2004 இல் சுனாமியின்போது ஒரு தொண்டராக இலங்கைக்கு வந்தபோது இலங்கையைச் 'சேர்ந்த பெண்ணையே திருமணம் செய்து இலங்கையிலேயே தங்கிவிட்டார். இதன் பின்னர்தான் இவர் பொய் கூறி உதவித்தொகையைப் பெற்று வந்ததாகக் கூறப்படுகின்றது. நீதிமன்றத்தில் இதற்காக இவருக்குச் சிறைத் தண்டனையும் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

# மர்ம மனிதர்களிடமிருந்து மக்களைக் காக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரியநேத்திரன் எம்.பி.வேண்டுகோள்



(கொழும்பு)

மர்ம மனிதர்கள் தொடர்பில் மக்கள் தம்மைப் பாதுகாக்கவே நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். எந்த மக்களும் சட்டத்தை கையில் எடுக்க விரும்பவில்லை. அரசாங்கம் மர்ம மனிதன் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்போதே இந்த நிலைமை மாறும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார். சட்டத்தை கையில் எடுப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ள கருத்துத் தொடரபில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எந்த மக்களும் சட்டத்தை கையில் எடுக்கவில்லை. சட்டத்தை கையில் எடுக்க அவர்கள் விரும்பவும்மாட்டார்கள். அதற்கு நாங்களும் அனுமதிக்கமாட்டோம்.

மர்ம மனிதர்களை பொதுமக்கள் துரத்திச் செல்லும்போது அவர்கள் பொலிஸ் நிலையங்களுக்குள்ளும், படையினரின் முகாம்களுக்குள் செல்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மக்கள் நீதிகேட்டுச் செல்லும போது அவர்களை அழைத்து கலந்துரையாடி அது தொடர்பில் பொலிஸார உரிய நீதியினை பெற்றுக் கொடுக்க வேண்டும். பொதுமக்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை அந்தவேளையில் தீர்க்க வேண்டியது பொலிஸாரின் பொறுப்பு. அதேபோன்று பொதுமக்களும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

பொதுமக்கள் தினமும் பீதியுடனேயே தமது பொழுதைப் போக்கி வருகின்றனர்.

இதனை நீக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

இரவு 7 மணிக்குப் பின்னர் தமது வீடுகளைவிட்டு வெளியேறப் பயப்படுகின்றனர். பெண்கள் தமது அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதில் பெரும் பீதியைக் கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் மர்ம மனிதன் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த 56 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் 46 பேர் படையினரின் தாக்குதலில் படுகாய மடைந்துள்ளனர்.

எனவே இன்று ஏற்பட்டுள்ள நிலைமையினைக் கட்டுப்பாட்டில் கொண்டுவர விரைந்து நடவடிக்கையெடுக்க வேண்டும். அதற்குப் பூரண ஒத்துழைப்பினை வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாயாராகவே இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

# ஐந்து மாநகர சபைக்கான தேர்தலில் முஸ்லிம்காங்கிரஸ் தனித்துப் போட்டி

(கொழும்பு)

கல்முனை, கொழும்பு மாநகர சபை உட்பட ஐந்து மாநகர சபைகளுக்கான தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்தது.

கல்முனை, கொழும்பு, கண்டி, காலி மற்றும் நீர்கொழும்பு ஆகிய மாநகர சபைத் தேர்தல்களிலேயே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும் என அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடும் என அவர் குறிப்பிட்டார்

இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கும் இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்டுள்ளதாக ஹசன் அலி தெரிவித்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிடவுள்ளவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நிறைவடைந்துள்ள நிலையில், கட்சியின் அதியுயர் பீடம் விரைவில் கூடி வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கவுள்ளதாக ஹசன் அலி மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அமைச்சர் றிசாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கல்முனை மற்றும் கொழும்பு மாநகர சபைத் தேர்தலிலும் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிடவுள்ளதாக அரசாங்கத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அக்கரைப்பற்று மாநகர சபைத் தேர்தலில் தேசிய காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

# போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களை நேரில் சந்திக்க வருகிறது அதிகாரிகள் குழு

(கொழும்பு)

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு கடந்த மூன்று தசாப்த கால மோதலின் காரணமாக வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் உதவுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தவுள்ளது.

இது தொடர்பாக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் சுமித்ரா ராகுபத்தா கொழும்பிலுள்ள யு.என்.டி.பி, யுனிசெவ் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் போன்ற பல்வேறு ஐக்கிய நாடுகள் சபை நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம், 6ஆம் திகதிகளில் அமைச்சு மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய அதிகாரிகள் குழுவொன்று இது தொடர்பாக நிலைமைகளை நேரில் கண்டறியும் வகையில் வடமாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

இப்பயணத்தின் முக்கிய நோக்கமாக வடமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் பெண்களை நேரில் சந்தித்து அவர்களுடைய விசேட தேவைகளைக் கண்டறிவதாகும்.

இக்குழுவினர் செப்ரெம்பர் 8ஆம் திகதி மாவட்ட செயலாளர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஐ.தே.கட்சி ஒழுக்காற்று விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரோசி சேனாநாயக்க, புத்திக்க பத்திரண, சுஜீவ சேனசிங்க மற்றும் துனேஸ் கன்கந்த ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

இது தொடர்பிலான எழுத்து மூலமான அறிவிப்பு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக கட்சியின் செயற்குழு அறிவித்துள்ளது.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்கு விசேட ஒழுக்காற்று குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் திலக் மாரப்பன தலைமையிலான குழு ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தவுள்ளது.

கட்சி நடவடிக்கைகளை பகிரங்கமான முறையில் விமர்சனம் செய்தமை மற்றும் கட்சிக்குப் பாதகமான கருத்துக்களை வெளியிட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் குறித்த உறுப்பினர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படமாட்டாது என கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எழுத்து மூல அறிவிப்பு விடுக்கப்பட்டால் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனிடையே, நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

# களுவாஞ்சிக்குடியில் படையினர் பாரிய தேடுதல் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை முதல் இராணுவத்தினர் பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதிகாலை 4 மணிமுதல் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளை பிரிவின் 2ஆம் 3ஆம் பிரிவு, வன்னியர் வீதி, சேர்ச் வீதி ஆகியவற்றிலேயே இராணுவத்தினர் தேடுதல் நடத்தினர். கடந்த காலங்களில் மர்ம மனிதன் என்ற பீதியில் மக்கள் உறைந்துள்ள நிலையில் இத்தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெற்றிடங்களுக்கு தீர்வு

(கொழும்பு)

ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர்களின் வெற்றிடங்களுக்கு தீர்வு காணப்படவுள்ளதாக உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இதற்காக உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் சகல பாடநெறிகளையும் 4 வருடங்களுக்கு அதிகரிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# வீடு,காணி மோசடிகள் குறித்து புலனாய்வுப் பிரிவு விசாரணை

(கொழும்பு)



வீடு மற்றும் காணி மோசடிகளில் ஈடுபடுவோர் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவின் உத்தரவின் அடிப்படையில் இந்த விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காணி மற்றும் வீடுகள் தொடர்பான மோசடிச் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளன என பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மோசடியான முறையில் காணி உறுதிகளைத் தயாரித்தல் மற்றும் ஏனைய ஆவணங்களைத் தயாரித்தல் போன்றன் தொடர்பில் தீவிர விசாரணை நடத்தப்படவுள்ளது.

அரசாங்கத்திற்கும், தனியாருக்கும் சொந்தமான காணிகள் மற்றும் சொத்துக்கள் இவ்வாறு மோசடியான முறையில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் வெள்ளவத்தைப் பிரதேசத்தில் தொடர்மாடி வீடு ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக மூன்று மில்லியன் ரூபா முற்பணமாக செலுத்தியதாகவும், முற்பணம் பெற்றுக் கொண்ட நபருக்கும் குறித்த தொடர்மாடி வீட்டுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நாட்டின் பல பாகங்களிலும் உள்ள மக்கள் மோசடிகளில் சிக்கித் தவிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

# தேசிய ஒருமைப்பாட்டை முன்னிறுத்தி நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பு

(கொழும்பு)

தேசிய ஒருமைப்பாட்டை முதன்மை நோக்காகக் கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு உருவாக்கப்படவுள்ளதாக முன்னர் அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும், தற்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் நோக்கம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய இலங்கையில் மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தக் கூடிய வகையிலான அரசியல் சாசன மற்றும் அரசியல் நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு பரிந்துரைகளை முன் வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தல், ஐக்கிய நாடாகக் கருதி மக்களை செயற்படத் தூண்டுதல், தீர்மானங்களை எடுக்க மக்களுக்கு அதிகாரமளித்தல் ஆகிய முக்கிய நோக்கங்களின் அடிப்படையில் இந்த தெரிவுக்குழு உருவாக்கப்படவுள்ளது.

# மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு காலம் தாழ்த்தி வருகின்றது

## சஜித் பிரேமதாஸ எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)




யுத்தம் நிறைவடைந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அரசாங்கம் மக்களுக்கு நிவாரங்களை வழங்குவதனை காலம் தாழ்த்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

கொட்டிக்காவத்தை விஹாரையில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் செலவிடப்பட்ட பாரியளவு தொகைப் பணம் தற்போது அர சாங்கத்திற்கு சேமிப்பாக காணப்படுகின்றது. பதினைந்து இலட்சம் மக்கள் வீடுகளின்றி வாழ்கின்றனர். பெரும் எண்ணிக்கையிலானோர் தொழில் வாய்ப்பின்றி அல்லலுறுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# அளவெட்டி ஸ்ரீ நாகவரத நாராயணர்
## தேவஸ்தான இரதோற்சவ சிறப்புமலர் - 2011



## அளவெட்டி - நாகேஸ்வரம் தல மகிமை



பற்றிப்படர்ந்த செடி, கொடிகளும் அவற்றைத் தாங்கி நின்ற சிறுமரங்களும் அடர்ந்த காடு போன்ற பகுதி அதனிடையே ஒற்றையடி வழிப் பாதை, குடியிருப்புகள் தூரந்தூரம் காணபட்டன. கமக்காரரே பாதசாரிகளாகக் குறிப்பிட்ட ஒற்றையடி வழியால் போக்குவரத்துச் செய்வார்கள். வழிப்போக்கர் காணும் படியாக, நல்ல நாகங்கள் வழிக்குக் குறுக்கே கிடக்கும் மனிதரைக் கண்டவுடன் ஓடி மறைந்து ஓடிவிடும். விளாமரம், நாவல் மஞ்சள் மரங்கள் இணைந்து காணப்பட்ட மரத்தடியில் ஒரு பெரிய புற்று. அந்தப் புற்றடியில் அந்த நாகங்கள் காட்சி தரும். சில சந்தர்ப்பங்களில் அந்தப் புற்று வாயில் நின்று படமெடுத்தாடிக் காட்சி தரும.

இவற்றை அவதானித்த வழிப்போக்கர்கள் அந்தப் புற்றடியை வழிபடத் தொடங்கினர். இதன் அருகாமையில் ஆடு, மாடுகள் நீர் பருகுவதற்காக ஒரு கேணியும், ஆவுரஞ்சிக் கல்லும் ஆன்றோரால் வெட்டுவிக்கப்பட்டுக் கிடந்தன. இதனால் இந்த வழிபாட்டிடம் கேணியடி நாக தம்பிரான் என அழைக்கப்பட்டது. காலப்போக்கில் பற்றைகள் வெட்டப்பட்டுக் கமநிலங்களாக்கப்பட்டன. அந்தக் கேணியும், கிணறாக மாறியது. தற்போதுள்ள ஆலயத்துக்குத் தெற்கேயுள்ள கிணறு இதுவாகும்.

கேணியடி நாகதம்பிரான் அன்பர் ஒருவருக்கு கனவில் தோன்றி, ஆவணி ரோகிணி கிருஷ்ண ஜயந்தியில் எனக்குப் பொங்கலிடுங்கள் எனக் கூறியபடி, எம்பெருமானுக்கு ஆவணி ரோகிணியில் முற்காலம் தொட்டுப் பொங்கல் நிகழ்ந்து வந்தது. இவ்வாறாகப் பூசிக்கப்பட்ட தலமே, இன்று நாம் காணுகின்ற ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானமாகும்.

இவ்வாலயம் எந்தக் கட்டடமுமின்றி, ஒரு கோணக்கல், ஒரு பாம்பின் உருவம், ஒரு வைரவ ஆலயம். இவை வெறும் நிலத்தில் வைக்கப்பட்டுக் கிடந்தன. ஆனால் வெள்ளி, செவ்வாய் பொங்கற் காலங்களில் ஆலயத்தின் அயலவர்கள் வந்து தரிசித்துச் செல்வர்.

14.02.1953 இல் சிறியேனுக்குக் கனவில் வந்து காட்சி தந்தபடி ஆலய அருகிலுள்ள வீட்டில் வசிக்க வந்தேன். 09.04.1953 தொடக்கம் எம்பெருமானைப் பூசிக்கும் பேறு பெற்றேன். 01.01.1969 இல் ஒரு சிறிய கோயில் கட்டுவித்தேன். படிப்படியாய் எம்பெருமான் கோயில் வளரத் தொடங்கியது. பல அடியார்கள் வந்து தரிசித்து விமோசனம் பெற்றனர். அவனின்றி ஓரணுவும் அசையாது. அவன் என்னை நடத்த, யான் நடக்க முற்பட்டேன். அந்த முற்பாடு தற்போது அடியார்கள் காணும் பெருங்கோயிலாக மாறியது.

"இருணோக்கிச் செல்லு மெம்மை
இடருளுது எழிற்கை காட்டி
பொருணோக்கும் கனவில் வந்து
புகலிடங் காட்டி நித்தம்
தெருனோக்கு வாக்காய் நின்று
திருவருள் புரியும் செல்வா
அருணோக்கு நாக நாதா
அடியினை போற்றி போற்றி"

என்று என் ஐயனை வேண்டி நின்றேன்.

என்னை ஆதரித்தால் உன்னுள்ளே தரிப்பேன் எனக் கனவில் வாக்குத தந்தது, சங்கானை வாசியின் இறந்த பாலன் உயிர்தத்து, மகப்பேற்றில்லாவிட்டால் மரணத்தை எதிர் நோக்குவேன் என்ற பெண்ணுக்குச் சந்தானம் கொடுத்து வாழவைத்தது, தீராத புற்று நோயைத் தீர்த்தது, பேசாத ஊமையைப் பேசவைத்தது, கண்பார்வை கொடுத்தது, வயிற்றுச் சூலை நோய் தீர்த்தது, முடவனை நடக்கச் செயதது, தீராத வஞ்சனைப் பைசாச தோஷங்களை நக்கியது, அகதியின் வாக்கில் நின்று சாட்சி கூறியது, நீலப்பூ பூத்த மந்தாரை வெள்ளைப் பூ பூத்தது என இத் தகைய பற்பல அற்புதங்களைக் காட்டி வந்தார். பணிந்தார் வழுத்தினார்க்கெல்லாம் வரங்கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

சிறியேனுக்குரிய சகலதிறமை - பெருமைகளுக்கெல்லாம், எம் பெருமானாகிய நாகவரத நாராயணரும், ஸ்ரீசொர்ண மனோன் மணியுமே காரணம் என்பதை எனது அன்பர்கள் எல்லாரும் அறிவார்களாக.

**அருட்கவி சீ. விநாசித்தம்பி புலவர் M.A.**

## ஆலயத் தலைவர் இதயத்திலிருந்து...



ஓம் நமோ நாராயண நம.

எல்லாம் வல்ல நாராயணப் பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து கொண்டு ஈழத் திருநாட்டின் தலையான வடபாகத்தல் அளவைப் பதியிலே அருள் வீசி அமர்ந்திருக்கும் ஸ்ரீநாக வரத நாராயணர் தலமானது வரலாற்றுச் சிறப்புமிக்க தலங்களில் ஒன்றாகும். இறந்த பாலகன் உயிர்பெற்றமை, ஆகாயத் தீர்த்தம் பொழிந்தமை, செம்மந்தாரை வெண்மந்தாரை ஆகியமை, தீரா நோய் தீர்த்தமை, அருட்கவி விநாசித்தம்பிப் புலவருக்கு அருள் வாக்களித்தமை முதலான இன்னோரன்ன அற்புதச் சிறப்புகளைக் கொண்டது இத்தலம். கடம்ப மரத்தில் நாகதம்பிரான் எனக்கோயில் கொண்ட இறைவன் அருட்கவியை ஆட்கொண்டு சிறு கோவிலாகி பின்னர் இரதம் ஓடும் ஆலயமாகப் பரிணமித்து விளங்குகிறது இவ்வாலயம்.

"நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும்
அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டவும்
யுகங்கள் தோறும் அவதரிப்பேன்" என்று கீதையில் புகன்ற கிருஷ்ணர் அளவை நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று ஆவணி ரோகினி அட்டமியாம் நன்நாளில் இரதத்தில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருள்புரிய வருகிறார். இத்தருணம் அன்படியார்கள் அனைவரும் அருள்பெற்று உறுதிபெற வேண்டும் எனவும், நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலைக்க வேண்டுமெனவும் எல்லாம்வல்ல நாகவரத நாராயணப் பெருமானை வேண்டி வணங்குகின்றேன்.

**திருமதி அருந்ததி குணபாலசிங்கம்,**
**ஆலய பொறுப்புரிமை பரிபாலன சபைத் தலைவர்.**


### இரதமேறி அருள்புரிவீர் நாகவரத நாராயணா!

**அருட்கவியை ஆட்கொண்ட
நாராயணா;
அவலுண்டு குலம்காக்கும்
நாராயணா;
திருசெகமா துடனாட நாராயணா;
திகழ் சிலம்புக் கண்ணசைய
நாராயணா;
சாங்குமேனி தண்டொலிய்ய நாராயணா;
சஞ்சலங்கள் தீர்ப்பதற்காய்
நாராயணா;
ஆவணிரோ கிணிஅட்டமியில்
நாராயணா;
ரதமேறிவா நாகவரத நாராயணா!**

**திருமதி வ. ஜெகசூரியர்.**

**மலராக்கம் : தம்பிராசா பரமலிங்கம்**

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசியுரை



சகல ஆன்மாக்களும் வழிபாடு செய்து உய்யும் வண்ணம் அளவெட்டியில் நாகேஸ்வரம் என்னும் பதியில் கோயில் கொண்டு அருள் பாலிக்கும் ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமானுடைய பெருந்திருவிழாவிலே இன்றைய தினம் இரதோற்சவமாகும்.

தசாவதார மூர்த்தியாம் நாராயணப் பெருமான் ஒவ்வொரு அவதாரத்திலும் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டி உயிர்களைக் காத்தருள் புரிகின்றார். அந்த வகையில் இன்றைய தினமும் அழித்தல் தொழிலைக் குறிக்கும் முகமாக அழகிய சித்திர ரதத்திலே பவனி வந்து மக்களைக் காத்தருள் புரிகின்றார்.

இந்த ரதோற்சவத்திலே கலந்துகொள்ளும் அடியார்கள் அனைவரும் நாகவரத நாராயணருடைய அருளைப் பெற்று சீரும், சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல ஸ்ரீநாகவரத நாராயணப் பெருமானை வேண்டி ஆசிகூறி அமைகின்றேன்.

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

**'சிவாகம கிரியாமணி'**
**ப. சண்முகசுந்தரக் குருக்கள்**


**அசோகா நகையகம்**
22 கரட் ஆபரணங்களுக்கு நம்பிக்கையான இடம்.
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/869)

யாழ்.நகரில் மக்கள் போற்றும் மகத்தான ஜவுளிச் சங்கமம்!
**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2063
(C/868)

எம்பெருமான் போற்றி! இலட்சுமி நாதா போற்றி!
**இளவரசி சேலைச் சோலை**
பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்ஜியம்
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(C/861)

அந்தியகால சேவைகள், மலர் வளையங்கள், பேழை ஏந்தும் ஊர்திகள், எம்போமிங் சேவைகளுக்கு
**கிளின்றன் அந்தியகால சேவை**
548, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
கிளை: 212, பிரதானவீதி, யாழ்.
தொ.பே: 222 3518

ஏற்றமிகு ஜவுளிகளின் காட்சியகம் மங்கையரின் மனம் கவரும் மாதிரிகள்
**மங்கை சில்க்ஸ்**
08, நவீன சந்தை, சுன்னாகம்.
(C/876)

நாக வரதா! நாராயணா சித்திரத்தேரேறி வருக!
**க.கு.கந்தையாப்பிள்ளை அன்சன்ஸ்**
318 (124), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/866)

**வசந்திஜா எலெக்றிக்கல்ஸ்**
பைப் லைன் எலெக்றிக்கல் பொருட்கள்.
100, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.
(C/878)

மங்களகரமான நிகழ்வுகளைப் படம் பிடிக்க கலர் படச் சுருள்களைப் பிரதிசெய்ய, வீடியோப் படப்பிடிப்புகளுக்கும்
**சாயி போட்டோ**
1010, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி.
(C/864)

சுவை மிகுந்த சைவ உண்டிகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
**முருகானந்தா உணவகம்**
778, 779 கே.கே.கே.எஸ்.வீதி, தட்டாதெரு சந்தி.
(C/867)

ஸ்ரீநாகவரத நாராயணர் நானிலத்தே தேரேறி வருக! காவணி கோவியர் காவலனே கம்சவதம் பரிகோவலனே அடியார்க்கிரங்கும் அரங்கா போற்றி! அன்பில் விளைந்த அமுதமே போற்றி!
**ஓர் அன்பன்**
**கே.கே.எஸ். வீதி. யாழ்.**
(C/871)

எம்பொருமாளே போற்றி! இலட்சுமி நாதா போற்றி! போற்றி!
**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C/877)

நாகத்திலாடிடும் நந்தா கோவிந்தா நாடுவார்க் கருளும் ஞானவா ரிதியே!
**றூபா பன்முக வர்த்தகம்**
104A, ஸ்ரான்லி வீதி, யாழ்.
(C/860)


சல்வார், சாறி, திருமணப்பட்டுப் புடைவைகளுக்கு நாடவேண்டிய ஒரேஇடம்
**ஜி.எஸ்.லிங்கநாதன் அன்கோ**
13, 14, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(C/863)

சித்த மூலிகை மருந்துப் பொருட்கள், அபிஷேகப் பொருட்கள்
**க.செ.கைலாசப்பிள்ளை அன்சன்ஸ்**
76, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(C/862)

கிளர்படைமுன் தேரேறிக் கீதைசொன்ன மாயவனே! ஒளிர்சூரிய சோதிதனை உணர்ந்தினிது காண்பேனோ? வளர் நாகேஸ்வர நகர் வீதியிலே தேரேறி வாருமையா!
**ஓர் அடியான்**
**154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.**
(C/870)

நம்பினார் தமைக்காக்கும் நாகதம்பிரானே போற்றி! வெம்பவ வினைகள் தீர்க்கும் வேணுகா கோவிந்தா போற்றி!
**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C/865)

# நண்பரைக் கௌரவப்படுத்த




உறவுகளில் சிறந்தது நட்பே என்பதினை நிரூபிக்கும் சம்பவமொன்று பிரேசிலில் நடந்துவருகின்றது. பிரேசில் நாட்டின் தென்கிழக்கு மாநிலமான மினாஸ் கொராயிஸை சேர்ந்த ஸெலிரொஸி என்ற நபர் தனது இறந்த நண்பனை கௌரவப்படுத்தும் முகமாக கடந்த 23 வருட காலமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவும் நபரொருவர் சவப்பெட்டியில் உறங்கி வருகின்றார்.

அந்நபரைப் பற்றி அவருடைய 14 வயது பேரன் பாடசாலை பத்திரிகைக்கு கட்டுரையொன்றை எழுதியதையடுத்தே இந்த நீண்டகால இரகசியம் அம்பலமாகியுள்ளது. இளமைக்காலம் முதலே உற்ற நண்பர்களாக பழகி வந்த ரொஸியும் அவரது நணபரும் பல வருடங்களுக்கு முன் யார் முதலில் இறக்கிறாரோ அவருக்காக மற்றவர் சவப்பெட்டி வாங்கி வருவது என வாக்குறுதியளித்துக் கொண்டனர்.

இந்நிலையில் 1983 ஆம் ஆண்டு கார் விபத்தில் ரொஸி இறந்து விட்டதாக தவறுதலாக கருதி நண்பர் ஒரு சவப்பெட்டியை வாங்கி வந்துள்ளார். எனினும் அவர் இறக்கவில்லை. பின்னர் 1988ஆம் ஆண்டு அந்த நண்பர் இறந்து விட்டதால் அவரது ஞாபகார்த்தமாக அவரால் வழங்கப்பட்ட சவப்பெட்டியில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவும் ரொஸி உறங்கி வருகிறார்.

# மனித மூளைக்கு நிகரான

அறிவாற்றல் உடைய கணினி (cognitive computing) தொழில்நுட்ப துறையில் புதிய பரிணாமமாக மனித மூளையின் செயற்பாடுகளை ஒத்த முன்மாதிரி 'சிப்' இனை உருவாக்கியுள்ளதாக ஐ.பி.எம் நிறுவனம் அறிவித்துள்ளது. இச் 'சிப்' ஆனது மனிதர்களின் மூளையைப் போல தரவுகளை செயன்முறைப்படுத்தக்கூடியன. சூழலை உணர்தல், இலக்குகளைத் தெரிந்து கொள்ளல், சுற்று வட்டாரத்துடன் தொடர்பு கொள்ளல், சிக்கலான தரவுகளை உணர்ந்து கொண்டு சரியான பதிலை வழங்குதல் ஆகியவையே இதன் தயாரிப்புக்கான முக்கிய நோக்கம் என ஐ.பி.எம் தெரிவிக்கினறது. செயற்கை நுண்ணறிவின் (artificial intelligence ) அடிப்படையாக இதன் உருவாக்கமானது திகழுமென ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை வெளியிடடுள்ளனர். இதனை உருவாக்கும் திட்டமானது 100 ஆராய்ச்சியாளர்களின் பங்குபற்றுதலுடன் சுமார் 6 வருடங்களாக நடைபெற்றுள்ளது. இதற்காக ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சித் திட்டங்களுக்கான முகவர் நிலையம் சுமார் 41 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை நிதியுதவியளித்துள்ளது. ஐ.பி.எம் அமைப்பும் இதற்கு நிதியுதவியளித்துள்ளது.



# பறக்கும் கார்

மெக்சிகோவில் வலேரி பல்ககோவ் (72) எனும் முன்னாள் விமானி பறக்கும் கார் ஒன்றை கண்டுபிடித்துள்ளார். இந்த கார் V.Bulgakov என அழைக்கப்படுகின்றது. பறக்கும் கார் ஆனாலும் இது அதிக தூரத்திற்கோ உயரத்திற்கோ பறக்கவில்லை. 1987 ZAZ Tavria வகைக்காரை மேம்படுத்திச் செய்யப்பட்ட இவ்விமானம் மணிக்கு 60 மைல் வேகத்திலும் ஆகக்கூடியளவு 10 மீற்றர் உயரத்திற்கும் 600 அடி தூரத்திற்கும் பறந்தது.



நான்கு இறக்கை கொண்ட இந்தக்கார் வானில் பறக்கும் தூரத்தைப்பெற 20 விநாடிகளை எடுக்கின்றது. இவர் இதனை மொஸ்கோவின் Autoexotics எனும் மோட்டார் வண்டிக்காட்சியில் அறிமுகப்படுத்தினார். .

இவர் இதனை விமானத்தை எப்படி உயர்த்துவது என்றும் எவ்வாறு தரையிறக்குவது என்றும் விமானிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக உருவாக்கியுள்ளார். ஆனால் இதனைவிடவும் கடந்த வருடம் யூலையில் அமெரிக்கத் தயாரிப்பான Terrafugia Transition எனும் பறக்கும் கார்தான் மிகவும் திறனுள்ள பறக்கும் காராகப் பெயரெடுத்துள்ளது. வீதியிலும் செல்லக்கூடியவாறு மடிக்கக்கூடிய சிறகுகளைக் கொண்டுள்ளது.

இதனை இலகுரக விளையாட்டு விமானமாக 2012ஆம் ஆண்டளவில் 194,000 டொலரிற்கு (118,000 பவுண்) விற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2009 இல் பரீட்சார்த்தப் பறப்பின்போது இது 3000 அடி வரை உயரத்திற்கு எழும்பியது.

# 2000 வருடத்திற்கு முற்பட்ட மரச்சாலை

இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய "அயர்ன் ஏஜ்" எனப்படும் இரும்பு காலத்திய மிகவும் நீளமான அரிய மரச்சாலை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சாலை மிகவும் புராதனமானதாக இருந்தாலும் இதில் உள்ள வேலைப்பாடுகள் நவீன காலத்திய கலை வேலைப்பாடுகளுடன் உள்ளது. க்ளெட்ஸ்டென் அருகே வெவ்னே நதிப் படுகையில் ஈர நிலத்தில் இந்த மரச் சாலை அமைக்கப்பட்டிருந்தது.

இந்தச்சாலை 13 அடி அகலமும், 1600 அடி நீளமும் கொண்டதாக உள்ளது. இதன் மீது அடர்ந்த பாசிகள் படிந்திருந்தது. அதுவே அதற்கு பாதுகாப்பாக இருந்துள்ளது. மொத்த சாலையையும் ஆராய்ச்சியாளர்கள் சிறிதும் சேதமின்றி பத்திரமாகத் தோண்டியுள்ளனர்.

இந்த மரச்சாலை ஐஸ்னி பழங்குடியினர் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. நார்.. போல்க் பகுதிக்குச் செல்ல வியாபாரிகள் இந்தப் பாதையைப் பயன்படுத்தி இருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

# Facebook Chat ஐ கணினி Desktop இல் கொண்டு வர

பேஸ்புக் இணையத்தளம் பல வசதிகளை தனது பாவனையாளர்களுக்கு உருவாக்கி தந்தாலும் பேஸ்புக் சாட்டிங்கில் ஒன்லைனில் இருக்கும் நண்பர்கள் மற்றும் ஏனையோரும் ஒரே வரிசையில் தெரிவதால் அதைக் கையாள்வதில் சிலர் சிரமங்களை எதிர்நோக்கலாம். இவற்றைத் தவிர்த்து இலகுவான வடிவமைப்புடன் பேஸ்புக் சாட்டிங்கை உங்கள் கணினியின் டெஸ்க்ரொப்பில் கொண்டுவர உதவும் desktop client fTalk ஆகும். இதனை தரவிறக்கி நிறுவிக்கொண்ட பின்னர் பேஸ்புக் கணக்கின் பயனாளர் பெயர் கடவுச்சொல் பயன்படுத்தி உள்நுழையுங்கள். authorization செய்ததும் பழைய MSN வடிவில் fTalk இயங்கத் தொடங்குகிறது. ஒன்லைன் மற்றும் ஒப்லைன் நண்பர்களை தனித்தனியாக பிரித்துக் காட்டுகின்றமை இலகுவான பாவனைக்கு உதவுகிறது. மேலும் பல விருப்பத் தேர்வுகளையும் கொண்டிருக்கிறது.

தரவிறக்கம் செய்ய:- http://www.ftalk.com/

# இலவசங்களை அள்ளிக்கொடுக்கும்

பொருட்களை தூக்கி எறியாமல் யாருக்காவது இலவசமாக கொடுக்க நினைத்தால் அதற்கான இணைப்புப் பாலமாக விளங்கக் கூடிய இணையத்தளமாக யாகிட் அமைந்துள்ளது. இந்த பிரிவில் முன்னோடியான பிரிசைக்கிள் வகையை சேர்ந்தது என்றாலும் யாகிட் மேலும் ஒரு கொடுக்கல் சேவை என்ற அலுப்பை ஏற்படுத்தாமல் இருக்கிறது. அதற்கு காரணம் எளிமை மற்றும் பயன்பாட்டுத்தன்மை.

இந்த தளம் செயற்படும் விதம் மிகவும் எளிதானது. கொடுக்க விரும்புகிறவர்கள் கொடு பகுதியில் தாங்கள் பெற விரும்பும் பொருள் பற்றி குறிப்பிட்டால் போதுமானது. பொருட்களை பெற விரும்புகிறவர்கள் தங்களுக்கு தேவையான பொருள் பட்டியலிடப்பட்டுள்ளதா என்று தேடிப் பார்த்து கொள்ளலாம்.

உலகளாவிய தளம் என்பதால் இணையவாசிகளின் இருப்பிட நகரத்தின் அருகாமையில் பட்டியலிடப்படுள்ள பொருட்களே காட்டப்படுகின்றன. எந்த எந்த நகரங்களில் இருந்து விஜயம் செய்கின்றனரோ அந்த நகரின் அருகாமையில் தரப்படும் பொருட்களை பெறலாம்.

இப்போது தான் தொடக்கப்பட்டுள்ள தளம் என்பதால் பெரிய அளவில் பரிமாற்றங்கள் இல்லை. ஆனால் நமக்கு பயன்படாதது யாருக்கேனும் பயன்படட்டும் என்னும் கருத்தின் அடிபபடையில் பிறருக்கு கொடுப்பதை உக்குவிக்கும் உயர்ந்த நோக்கம் கொண்ட தளம் என்பதால் இது பிரபலமானால் நன்றாக இருக்கும்.

இணையதள முகவரி:-
http://www.yaakit.com/items.html

கணினி மூலை

# ஆயுளைக் குறைக்கும்

ஒரு நாளைக்கு 6 மணித்தியாலங்கள் தொலைக்காட்சி பார்ப்பது ஆயுளில் 5 வருடங்களைக் குறைக்குமென்று ஓர் ஆய்வு கூறுகின்றது. 25 வயதிற்குப் பின்னர் ஒருவர் தொலைக்காட்சி பார்க்கும் ஒவ்வொரு மணித்தியாலமும் வாழ்நாளில் 22 நிமிடங்களைக் குறைக்குமென ஓர் அவுஸ்ரேலிய ஆய்வு கூறுகின்றது. இது புகைத்தலைப் போல ஆபத்தானது. ஆனால் புகைத்தல் வீதங்கள் குறையுமளவிற்குத் தொலைக்காட்சி பார்க்கும் வீதம் குறையவில்லை என்பதுதான் உண்மை. கடந்த வருடம் இடம்பெற்ற இன்னோர் ஆய்வு ஒரு மணித்தியாலம் தொலைக்காட்சி பார்ப்பது 8% ஆயுளைக் குறைக்குமென்றது. அவுஸ்ரேலியர்கள் ஒரு நாளைக்கு 2 மணித்தியாலங்கள் பார்க்கின்றனர்.

இதனால் ஆண்களிற்கு அவர்களது ஆயுட்காலத்திலிருந்து 1.8 வருடங்களும் பெண்களுக்கு 1.5 வருடங்களும் குறைகின்ற தென்கின்றனர். பிரித்தானியர்களோ நாளொன்றிற்கு 3 மணித்தியாலம் தொலைக்காட்சி பார்க்கின்றனர் என்கின்றது இந்த ஆய்வு. உடற்பயிற்சியின்றி ஒரேயிடத்தில் இருப்பதால் இது இதய நோய்களைக் கொண்டு வருகின்றது. வழமையாகவே உடற் பயிற்சியின்றி இருப்பது எமது சுகாதாரத்திற்குக் கேடு என்பது அனைவருக்கும் தெரிந்ததே.



இந்த அறிக்கையானது, 1999-2000 இற்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வை அடிப்படையாகக் கொண்டு 25 வயதிற்கு மேற்பட்டவர்களில் இன்னும் 11,000 பேரை உட்படுத்தி மீளச் செய்த போதே கிடைத்தது.

# கச்சதீவை திரும்பப் பெறவேண்டுமென பா.ஜனதா நிறைவேற்றியது தீர்மானம்

(புதுடில்லி)


இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட கச்சத் தீவை மீண்டும் இந்தியா திரும்பப் பெற வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சியின் சட்டம் மற்றும் சட்டம் இயற்றும் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

புதுடில்லியில் பா.ஜ.க தலைமை அலுவலகத்தில் அந்தப் பிரிவின் தேசியக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் நாடு தழுவிய ரீதியில் இருந்து சட்ட வல்லுநர்கள் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில், இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்திய மீனவர்கள், குறிப்பாக தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதும், கொல்லப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இதன் காரணமாக மீனவ சமுதாயத்தினர் இடையே பதற்றம் நிலவுகிறது. எனவே, மத்திய அரசு தமிழக மீனவர்களின் உயிர்களைப் பாதுகாக்கும் வகையில் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், இது போன்ற நடவடிக்கைகளில் இலங்கை கடற்படை மீண்டும் ஈடுபடுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க இலங்கை அரசை வலியுறுத்தவேண்டும் எனத் தீர்மானம நிறைவேற்றப்பட்டது.


இந்தியச் செய்திகள்



அன்னா ஹசாரேவின் உண்ணாவிரதம் தொடர்ந்து வரும் நிலையில் டாக்டர்கள் அவரது உடல்நிலையை அவ்வப்போது பரிசோதித்து வருகின்றமையைக் காணலாம்.

# நாட்டின் மீதான பற்றுக் காரணமாக ஊழலை சகித்து வாழ்கின்றனர் மக்கள்

## என்கிறார் கமல்ஹாசன்



(புதுடில்லி)

அன்னா ஹஸாரே குறித்து முதனமுறையாக தமிழகத்திலிருந்து ஒரு பிரபலக் குரல் எழுந்துள்ளது. குரல் கொடுத்திருப்பவர் கமல்ஹாசன்.

நாட்டின் மீதுள்ள பற்றுக் காரணமாகத்தான் இன்னும் நாம் இலஞ்சம் ஊழலை சகித்துக் கொண்டு வாழ்கிறோம் என்றும், மக்கள் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அன்னா ஹஸாரே போராட்டத்துக்கு வட இந்திய நடிகர் நடிகைகள் வெளிப்படையான ஆதரவைத் தெரிவித்துள்ளனர். ஆனால் தென்னிந்தியாவில் இதுவரை ஒருவரும் இதுபற்றி வாயே திறக்காமல் உள்ளனர். அரசியல்வாதிகள் தெளிவாகப் பேசவில்லை. திரையுலகினரும் கூட இதுகுறித்து இதுவரை எதையும் பேசாமலேயே உள்ளனர்.

இந்த நிலையில் முதல் குரலை எழுப்பியுள்ளார் நடிகர் கமல்ஹாஸன். அன்னா ஹஸாரேவின் போராட்டம் குறித்து மறைமுகமாக அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து கமல் கூறுகையில், மக்களிடம் வரி மூலம் பணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால் அதற்கு தகுந்தாற் போல் அடிப்படை வசதி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. நாம் கஷ்டப்பட்டு உழைத்த பணம் இலஞ்சம், ஊழல் என போகிறது. ஆனாலும் நாட்டின் மீது உள்ள பற்றுக் காரணமாக இங்கு வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். என்னை மாதிரி உள்ள இலட்சக்கணக்கான மக்கள் ஒருநாள் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது, என்று கூறியுள்ளார்.

# உண்ணாவிரதம் இருப்பதனால் மட்டும் காந்தியாக முடியாது என்கிறார் நமீதா



(புதுடில்லி)

உண்ணாவிரதம் இருப்பவர்களெல்லாம் காந்தியாகி விட முடியாது என நடிகை நமீதா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக,

அவர் அளித்துள்ள பேட்டியில், அன்னா ஹஸாரேவின் போராட்டம் வெறும் பரபரப்புச் செய்திக்குத் தான் இன்று உதவிக் கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டத்தால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை. நாட்டில் இன்றைக்கு முக்கிய பிரச்சினை தீவிரவாதம்தான். அதை ஒழிக்கத் தான் நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மக்கள் பாதுகாப்பாக இருக்கிறார்களா என்று பாருங்கள். ஊழல் ஏதோ இன்று நேற்று வந்துவிடவில்லை. பல நூறு ஆண்டுகளாக இந்த நாட்டில் வேரூன்றிப் போன ஒன்று. அதை இந்த மாதிரி திடீர் போராட்டங்களால் ஒழிக்க முடியாது. இந்தப் போராட்டத்தை மக்களிடம் கொண்டு போக வேண்டும்.

ஹஸாரே அரசியலமைப்புடன் சண்டை போட்டுக் கொண்டிருப்பது தவறு. இலஞ்சம் தரக் கூடாது என்ற உணர்வை முதலில் மக்களிடம் உண்டாக்க ஹஸாரே போன்றவர்கள் முயற்சிக்க வேண்டும். கொடுப்பதை நிறுத்தினால் வாங்குவதும் நின்று போகும். நான் குஜராத் மாநிலத்தில் பிறந்தவள். காந்தி பிறந்த மண்ணில் பிறந்த எனக்கு காந்தீய போராட்டத்தின் அடிப்படை தெரியும். ஹஸாரேயின் போராட்டம் காந்தீய போராட்டமல்ல. உண்ணாவிரதமிருந்தால் காந்தியாகிவிட முடியாது. காந்தியுடன் மக்கள் இருந்தார்கள். 100 சதவீத வெற்றி அவருக்குக் கிடைத்தது. ஹஸாரேயின் போராட்டம் சிலரால் திட்டமிடப்பட்டதாகத் தெரிகிறது. இதற்கு 20 சதவீத பலன் கூட இருக்காது எனத் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற நிலைக்குழு மீது விமர்சனம் உரிமை மீறல் விவகாரமென எச்சரிக்கை

(புதுடில்லி)

அன்னா ஹசாரே ஆதரவாளர்கள் நாடாளுமன்ற நிலைக் குழுவை விமர்சனம் செய்வது உரிமை மீறல் விவகாரம் என மத்திய அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரதமர் அலுவலக இணையமைச்சர் நாராயணசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது: லோக்பால் மசோதா தொடர்பாக நாடாளுமன்ற நிலைக்குழு பொதுமக்களிடம் கருத்துக் கேட்டுள்ளதை நேரத்தை வீணடிக்கும் செயல் என ஹசாரே குழுவினர் விமர்சித்துள்ளனர்.

இது சரியல்ல. நாடாளுமன்ற நிலைக்குழு என்பது மினி நாடாளுமன்றம் போன்றது. இந்த அமைப்பை விமர்சனம் செய்வது நாடாளுமன்றத்தை விமர்சனம் செய்வது போன்றது. எனவே இது உரிமை மீறல் விவகாரமாகும்.

சிலர் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொள்ளைக்காரர்கள் என கூறுகின்றனர். இது தனிநபர் தாக்குதல் அல்ல. நாடாளுமன்றத்தை அவமதிக்கும் செயல்.

ஊழலுக்கு எதிராக போராடுவதாக கூறிக் கொள்பவர்கள், ஜனநாயக அமைப்புகளை அநாகரிகமாக விமர்சிப்பது ஏற்கக் கூடியதல்ல.

அனைத்தையும் மக்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# நடுக்கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த தமிழக மீனவர்கள் மீது தாக்குதலாம்

(புதுடில்லி)

தமிழக நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இலங்கை மீனவர்களால் தாக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில் மூன்று பேர் கத்திக் குத்துக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாகைத் துறைமுகத்தில் இருந்து கடலுக்கு புறப்பட்ட தமிழக மீனவர்கள் நடுக்கடலில் தமது தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது 6 நூலிழைப் படகுகளில் வந்த இலங்கை மீனவர்கள், நாகை மீனவர்களின் மீன்பிடிப் படகுகளை சுற்றி வளைத்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த செல்வராஜ், பழனிச்சாமி, ராஜா பொன்னுக்குட்டி, விந்தன், விஜி, அமிர்தராஜ், மேகநாதன், பாலையா, சந்தோஷ, ராஜசேகர், ரவி, செந்தில், ஜெகன் என்ற வெங்கடேசன் ஆகியோரே தாக்குதலுக்கு உள்ளாகினர்.

இதில் மீனவர்கள் பாலையா, பழனிச்சாமி, ஜெகன் என்ற வெங்கடேசன் ஆகிய 3 பேரும் கத்தியால் குத்தப்பட்டனர்.

நாகை மீனவர்களின் படகுகளிலிருந்த மீன்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்ளை இலங்கை மீனவர்கள் பறித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

தாக்குதலுக்குள்ளான மீனவர்கள் 14 பேரும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை கரைக்கு திரும்பினர்.

கத்திக் குத்தில் காயமடைந்த மீனவர்கள் 3 பேரும் நாகை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



இலங்கையில், போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவும் வகையில், கடந்த 13ஆம் திகதி முதல், நிதி திரட்டும் பணியில் பா.ஜ., ஈடுபட்டுள்ளது. தாம்பரம் பா.ஜ., சார்பில், சண்முகம் சாலையில் நிதி திரட்டப்பட்டது. கட்சியின் தமிழக துணைத் தலைவர் டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன், கடைதோறும் சென்று உண்டியல் குலுக்கி நிதி திரட்டியதைக் காணலாம்.

# ஆபிரிக்காவில் 3 இலட்சம் குழந்தைகள் பட்டினியால் மிகக் கடுமையாகப் பாதிப்பு

## யுனிசெவ் நிறுவனம் தகவல்



(மொகாடி)

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் 3 இலட்சம் குழந்தைகள் பட்டினியால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் குழந்தைகளுக்கான தலைமை நிறுவனமான யுனிசெப் இந்தத் தகவலைக் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

பஞ்சம் மற்றும் பட்டினியின் காரணமாக கிழக்கு ஆபிரிக்காவின் இந்தக் குழந்தைகள் சாவின் விளிம்பில் உள்ளதாக யுனிசெப்பின் நிர்வாக இயக்குநர் அந்தோணி லேக் தெரிவித்தார்.

சோமாலியா, கென்யா, எத்தியோப்பியா, டிஜிபோடி மற்றும் எரித்திரியா ஆகிய நாடுகளில் ஏற்கெனவே 10 இலட்சம் மக்கள் பட்டினியால் இறந்துள்ளனர்.

இப்பகுதியில் வாழும் ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் உணவுத் தேவையை எதிர்நோக்கி உள்ளனர்.

சோமாலியாவில் மட்டுமே ஏறக்குறைய 4 இலட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் இப்பகுதி மிகப்பெரிய மனிதப் பேரழிவை எதிர்கொண்டுள்ளது என அவர் தெரிவித்தார்

சோமாலியாவில் நிலவி வரும் பட்டினி நிலைமை குறித்து ஆராய ஆபிரிக்க யூனியன் - ஐக்கிய நாடுகள் அமைப்பு தனியாக குழு அமைத்துள்ளது. குழுவின் தலைவர் ஜீன் பிங், மொகாடிசுக்கு சென்ற போது அவருக்கு இராணுவ வரவேற்பு அளிக்கப்பட்டதைக் காணலாம்.



# லிபியாவில் முக்கிய நகரங்கள் வீழ்ச்சி கடாபி நாட்டைவிட்டு தப்பியோட முயற்சி

(திரிபோலி)

லிபியாவில் கடாபி எதிர்ப்பாளர்கள் முக்கிய நகர்களை நேற்று முன்தினம் கைப்பற்றியதை அடுத்து கடாபி நாட்டைவிட்டு தப்பியோட முயற்சிப்பதாக எதிர்ப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

லிபியாவில் கடாபி இராணுவத்துக்கு எதிராக சமீபகாலமாக எதிர்ப்பாளர்களின் தாக்குதல் கடாபியின் இராணுவ வசம் இருந்த பல நகரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக எதிர்ப்பாளர்கள் வசம் விழுந்து வருகின்றன.

அவற்றில் தலைநகர் திரிபோலியில் இருந்து கிழக்கில் 160 கி.மீ தொலைவில் உள்ள ஜாவியா மற்றும் மேற்கில் உள்ள ஜிலிடான் ஆகிய நகரங்களை நேற்றுமுன்தினம் எதிர்ப்பாளர்கள் கைப்பற்றினர்.

அதேபோல் கிழக்குப் பகுதியில் உள்ள எண்ணெய் வளம் மிக்க பிரிகா நகரையும் அவர்கள் கைப்பற்றியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதையடுத்து திரிபோலியில் இருந்து 30 கி.மீ தொலைவில் எதிர்ப்பாளர்கள் நிலை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் எதிர்ப்பாளர்களின் இவ்வெற்றிகளை லிபிய அரசு மறுத்துள்ளது.

அதேநேரம் கடாபி தனது குடும்பத்துடன் லிபியாவில் இருந்து வெளியேற முயற்சி செய்து வருகிறார். எகிப்து, துனிஷியா, அல்ஜரியா, மொராக்கோ ஆகிய நாடுகள் அவரை வரவேற்கத் தயாராக இருக்கின்றன என்று எதிர்ப்பாளர்கள் கூறியுள்ளதையும் லிபிய அரசு மறுத்துள்ளது.

## விமானத் தாக்குதலின் எதிரொலி

# இஸ்ரேலுடனான போர் நிறுத்தத்தை முறித்துக்கொள்வதாக ஹமாஸ் அறிவிப்பு

(காஸா)

இஸ்ரேலுடனான போர் நிறுத்தத்தை முறித்துக் கொள்வதாக ஹமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது.

பாலஸ்தீனத்தில் காஸா பகுதியில் இஸ்ரேலிய போர் விமானங்கள் வெள்ளிக்கிழமை குண்டு வீசித் தாக்குதல் நடத்தின. இதில் 7 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதால் இஸ்ரேலுடனான போர் நிறுத்தத்தை முறித்துக் கொள்வதாக காஸா பகுதியில் அதிகாரத்தில் உள்ள ஹமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது.

இதைப்போலவே ஏனைய பாலஸ்தீனக் குழுக்களும் போர் நிறுத்தத்தை விலக்கிக் கொள்ள முன்வர வேண்டும் என்று அவ்வியக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

முன்னதாக எகிப்து எல்லைக்கு அருகில் இஸ்ரேலின் தெற்குக் கடற்கரைப் பகுதியான நெகாவாவில் கடந்த வியாழக்கிழமை நடந்த தாக்குதலில் 8 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பதில் நடவடிக்கையாகவே இஸரேல் விமானத் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை இஸ்ரேலின் நடவடிக்கையை நிறுத்தக் கோரி பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் ஐ.நா.விற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். லண்டனைத் தலைமையிடமாகக் கொண்ட சர்வதேச பொது மன்னிப்பு அமைப்பு இரு தரப்பினரும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளது



# வேலை வாய்ப்புச் செய்திகள்

**Northern central Hospitals (Pvt) Ltd** இல் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன. பொதுவான வகையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், மருந்தாளர், கணினிக் கட்டமைப்பு ஒழுங்கமைப்பாளர், வைத்திய பதவி உத்தியோகத்தர், கணக்காளர், நிதியாளர், களஞ்சியப் பொறுப்பாளர் போன்றனவும், தாதியர், தொழில்நுட்பவியலாளர் மற்றும் வாடிக்கையாளர் நலன்பேணும் உத்தியோத்தர்கள். ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் அண்மையில் எடுத்த பாஸ்போட் அளவிலான புகைப்படத்துடன் Cheif operating Office, Northern central Hospital (Pvt) Ltd, 529/19, K.Cyril C.Perera Mw.Col-10. Email: career@nchjaffna.com என்ற முகவரிக்கு 15.09.2011 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

கரைச்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வட்டக்கச்சிகு பொதுமுகாமையாளர் வெற்றிடம் உண்டு. முன் அனுபவம் அல்லது பொருத்தமான தகைமை உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தலைவர், கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வட்டக்கச்சி, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 28.08.2011 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும். குறிப்பு: விண்ணப்பத்தில் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பொது முகாமையாளர் (101/7) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடவும்.

**PC Systems** இற்குக் கணக்காளர் தேவை. தகைமையுள்ளவாகள் சுயவிபரக் கோவையுடன் ஆலடிச் சந்தி, யாழ்.வீதி, மானிப்பாய் என்ற முகவரிக்கு அல்லது aravino3@yohoo.com இற்கு அனுப்பி வைக்கவும்.

பத்திரிகை நிறுவனம் ஒன்றிற்கு பத்திரிகை மடிப்பவர்கள், ஒவ்செற் இயந்திரம் இயக்குபவர்கள், பயிலுநர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

அரச பணியாற்றும் குடும்பம் ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பெண் வேலையாளர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0770711018 இற்குத் தொடர்புகொள்ளவும்.

வடமராட்சியில் உள்ள வீடியோ மற்றும் புகைப்பட கலையகத்திற்கு அனுபவமுள்ள வீடியோ எடிட்டிங் மற்றும் போட்டோ சொப் இல் வடிவமைக்கத் தெரிந்தவர்கள் தேவை. ஆர்வமுள்ள இருபாலாரும் 0212262911; 0777491922 இற்கு தொடர்பு கொள்ளவும்.

யாழ்ப்பாணத்தில் எலக்டரிக் வெல்டர் மற்றும் வேலை பழகுபவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0773760594 இற்குத் தொடர்புகொள்ளவும்.

யாழ்.நகரில் இயங்கிவரும் **DSI** பாதணிகளின் காட்சியறைக்கு விற்பனையாளர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையை சுப்பசூஸ், 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 27.08.2011 இற்கு முன்னதாக அனுப்பிவைக்கவும்.

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படவுள்ள **Trade finance and invest ments Ltd** இற்கு கிளைமுகாமையாளர் (ஆண்), சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (ஆண், பெண்) தகைமையும், ஆர்வமும் உள்ளவர்கள் சுயவிபரக் கோவையை 01.09.2011 இற்கு முன்னதாக Trade finance and Investments Ltd, No.74, kannathiddy Road, Jaffna என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

குறிப்பு: கிளிநொச்சி விண்ணப்பதாரிக்கு திறமை அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்.

பருத்தித்துறையில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவரை முழுநேரமாகவோ அல்லது பகுதிநேரமாகவோ பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 021 226 4724, 0213007447 இற்குத் தொடர்புகொள்ளவும்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு மருத்துவ விற்பனைப் பிரதிநிதி தேவை. ஆர்வமுள்ளவர்கள் Euro Asian Phrama No.464, Thimbirigasyaya Road, Col-05, 0773497442 இற்குத் தொடர்பு கொள்ளவும்.

**HNDA** தகைமையும், கணனித் துறையில் முன் அனுபவமுள்ள கணக்காளர் உடன் தேவை. தகைமையுடயவர்கள் அற்புதா றேடிங் கொம்பனி, 198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

திருமுருகன் கொம் நெற் இல் பணிபுரிய கணினி, ஆங்கில அறிவுடைய இருபாலாரும் தேவை. ஆர்வமுடையவர்கள் 259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

ஐஸ்கிறீம் வானில் பணிபுரிவதற்கு 20-40 வயதிற்கு உட்பட்ட வேலையாளர் தேவை. ஆர்வமுடையவர்கள் 0779225603 இற்குத் தொடர்புகொள்ளவும்.

Ranhomes (Pvt) Ltd இல் கட்டட நிர்மாண நிறுவனமான பின்வரும் வெற்றிடங்கள் உண்டு. தொழில்நுட்ப நிறைவேற்றுனர்கள், கொள்வனவு அலுவலர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கணிய அளவையாளர், தச்சுத் தொழிலாளர், குழாய் பொருத்துநர், மேற்பார்வையாளர், Auto cad படவரைஞர், துப்புரவுத் தொழிலாளர், ஆற்றலும் ஆர்வமுடைய இருபாலாரும் No.841, Hospital Road, Chundikkuli, Jaffna, 021 222 04400 havor@ranhomes.c0m இற்குத் தொடர்பு கொள்ளவும்.

# கோடையில் கோழிகளுக்கு தண்ணீர் பராமரிப்பு



கோழிகள் தீவனம் இல்லாமல் பல நாட்களுக்கு உயிர்வாழும். ஆனால் தண்ணீர் இல்லாமல் அவற்றால் உயிர்வாழ முடியாது. கோழிகளைப் பொறுத்த மட்டில் தண்ணீர் இன்றியமையாப் பொருளாகும். கோடை காலங்களில் சுற்றுப்புற வெப்பத்தைக் குறைப்பதில் தண்ணீர் பெரும் பங்காற்றுகிறது.

வணிக அளவில் வளர்க்கப்படும் இறைச்சிக் கோழிகளுக்கு அவை உண்ணும் தீவனத்தைப் போல இரு மடங்கு தண்ணீர் தேவை. கோடையில் கோழிகளின் உடலிலிருந்து கூடுதலாக வெப்பம், அவை விடும் மூச்சுக் காற்றின் மூலமே வெளியேறுகிறது. பறவைகளைப் பொறுத்த மட்டில் வியர்வைச் சுரப்பிகள் இல்லாத காரணத்தால் கூடுதலாக உண்டாகும் உடல்வெப்பத்தை வியர்வை மூலம் வெளியேற்ற இயலாது.

எனவே கோழிகளால் சுவாசக் காற்று மூலம் தான் உடல் சூட்டினைத் தணித்துக் கொள்ள முடியும். இதற்காக கோழிகளுக்கு பெருமளவு தணணீர் தேவைப்படுகிறது.

கோடையில் ஹீட் ஸ்ட்ரோக் எனப்படும் வெப்ப அயர்ச்சியைக் குறைக்க தகுந்த தண்ணீர் கொடுப்பதன் மூலம் குறைக்கலாம். இத்துடன் தாது உப்புக்களையும் போதிய அளவு சேர்த்துக் கொடுத்தால் வெப்ப உயர்ச்சி குறைபாட்டை நீக்குவதுடன் கோழிகளுக்கு தண்ணீர் குடிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் தூண்டுகின்றன.

தண்ணீரில் நோய் உண்டாக்கும் கிருமிகளின் அளவைக் குறைக்க குளோரின் பவுடர், அயோடின் கலவைகள், ஹைட்ரஜன் பெர் ஒக்சைட் போன்றவற்றை பயன்படுத்தலாம். இதில் குறைந்த செலவில் குளோரின் வாயுவைப்பெற 1000 லீற்றர் தண்ணீருக்கு 5 கிராம் வரை பிளீச்சிங் பவுடரைப் பயன்படுத்தலாம். அயோடின் தயாரிப்புகளை 10 லீற்றருக்கு 1 மில்லி வீதம் பயன்படுத்தலாம்.

தரமற்ற குடிநீர் கோழிக்கு இரத்தக் கழிச்சல், சால்மோனல்லோசிஸ், கோலி பேசில்லோசிஸ் போன்ற நோய் பாதிப்புகளை உண்டாக்குவதுடன் அவற்றின் உற்பத்தித் திறனையும் குறையச் செய்கின்றன.


முட்டையிடும் கோழிகள் முட்டையிட்டவுடன் அதிக அளவு தண்ணீரைக் குடிக்கும்.

இரவு நேரங்களில் வெளிச்சத்துக்காகப் போடப்படும் விளக்குகளை அணைப்பதற்கு முன்னும், அதிக தண்ணீர் அருந்தும். இறைச்சிக் கோழிகளைப் பொறுத்தமட்டில் சூரிய ஒளிபட்டவுடன் அல்லது செயற்கையாக வெளிச்சம் அளித்தவுடன் அதிக அளவு தண்ணீர் குடிக்கும்.

எனவே கோடையின் வெப்பத் தாக்குதலை உணர்ந்து, தகுந்த அள்வில், தரமுள்ள தண்ணீரை கோழிகளுக்கு வழங்க வேண்டும்.

---

# நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு



## தினமுரசு நாளிதழ் நடத்தும்

## மாபெரும் பொது அறிவுப் போட்டி

பங்குபற்றுங்கள்! பரிசுகளை அள்ளுங்கள்

1. பொதுவாக ஒருவரின் சொந்த நாட்டை தாய்நாடு என்றே அழைப்பர். ஆனால் அதை 'தந்தையர் நாடு' என அழைத்தவர் யார்?
1) திருவள்ளுவர் 2) பாரதியார்
3) பாரதிதாசன் 4) நீலாவணன்

2. ஈழத்தில் 'மஹாகவி' என்ற புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரின் இயற்பெயர் என்ன?
1) சின்னத்துரை 2) சுப்பிரமணியம்
3) உருத்திரமூர்த்தி 4) சோமசுந்தரம்

3. தமிழ் செம்மொழி மாநாட்டு பாடலை எழுதியவர் யார்? அதற்கு இசையமைத்தவர் யார்?
1) சுந்தரம்பிள்ளை, எம்.எஸ்.விஸ்வநாதன்
2) அண்ணாத்துரை, எம்.பி.சீனுவாசன்
3) பாரதிதாசன், இளையராஜா
4) கருணாநிதி, ஏ.ஆர்.ரஹ்மான்

4. மல்லிகை பத்திரிகை ஆசிரியர் யார்? அவர் எழுதிய எந்த நூலுக்கு சிறிலங்கா சாகித்திய மண்டல விருது கிடைத்தது?
1) டொமினிக் ஜீவா, தண்ணீரும் கண்ணீரும்
2) ஞானசேகரம், குருதிமலை
3) தெளிவத்தை ஜோசப், காலங்கள் சாவதில்லை
4) செ. கணேசலிங்கன், சடங்கு

5. தங்கத் தாத்தா என அழைக்கப்பட்ட ஈழத்து கவிஞர் யார்?
1) விபுலானந்தர் 2) குமாரசாமிப் புலவர்
3) சோமசுந்தரப் புலவர் 3) ஆறுமுக நாவலர்

6. பன்னிரு திருமுறைகள் எத்தனையாம் நூற்றாண்டில் எநத மன்னனின் ஆட்சியில் தொகுக்கப்பட்டது?
1) 10 ஆம் நூற்றாண்டு, ராஜராஜசோழன்
2) 07 ஆம் நூற்றாண்டு, மகேந்திர பல்லவன்
3) 14 ஆம் நூற்றாண்டு, குலசேகர பாண்டியன்
4) 16 ஆம் நூற்றாண்டு, கிருஷ்ண தேவராயர்

7. ஆறுமுகநாவலர் அவர்கள் யாருடைய வேண்டுதலின் பெயரில் 'பைபிளை' தமிழில் மொழிபெயர்த்தார்.
1) சி.வை.தாமோதரம்பிள்ளை
2) தாவீது அடிகளார்
3) பீற்றர் பேர்சிவல் பாதிரியார்
4) மவுண்ட்பேட்டன் பிரபு

8. இசைப்பாடல்களால் அமைந்த வேதம் எது?
1) இருக்கு 2) யசுர்
3) சாமம் 4) அதர்வணம்

9. பத்தாம் திருமுறை எது? அதனை எழுதியவர் யார்?
1) தேவாரம், திருநாவுக்கரசர்
2) கந்தபுராணம், கச்சியப்பர்
3) திருப்புராணம், சேக்கிழார்
4) திருமந்திரம், திருமூலர்

10. அபிராமி அந்தாதியை எழுதியவர் யார்?
1) சோமசுந்தரப் புலவர் 2) சக்திமுற்றப் புலவர்
3) எஸ்.வி.சுப்பையா 4) அபிராமிப்பட்டர்

11. திருக்கோணேஸ்வரப் பதிகம் யாரால் பாடப்பட்டது?
1) திருஞானசம்பந்தர் 2) சுந்தரமூர்த்திநாயனார்
3) கோணேசநாதர் 4) இராவணேசன்

12. 'கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்' என்ற கீர்த்தனையை எழுதியவர் யார்?
1) முத்துசுவாமி தீட்சிதர் 2) அருணாசலக் கவிராயர்
3) வீரமணி ஐயர் 4) இராமலிங்க வள்ளலார்

13. 'மருணீக்கியார்' என்ற பெயரைக் கொண்டிருந்த சமயகுரவர் யார்?
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) மாணிக்கவாசகர் 4) சுந்தரமூர்த்தி நாயனார்

14. இணையற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கண்டு பிடித்த புகழ்பெற்ற கோட்பாட்டின் பெயர் என்ன?
1) வானவியல் கோட்பாடு 2) சார்பியல் கோட்பாடு
3) அளவையியல் கோட்பாடு 4) காந்தவியல் கோட்பாடு

15. 'சினிமா என் சாதனை, வீணை என் ஆராதனை' எனக் குறிப்பிட்ட திரைப்பட இயக்குநரான இசை மேதை யார்?
1) ஜி.என்.பாலசுப்பிரமணியம் 2) ரவிசங்கர்
3) கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் 4) எஸ்.பாலச்சந்தர்

16. 'லயஞான குபேர பூபதி' பட்டம் பெற்ற தவில் வாத்திய மேதை யார்?
1) வலயப்பட்டி சண்முகசுந்தரம் 2) நடராஜசுந்தரம்
3) தட்சணாமூர்த்தி 4) இணுவில் சின்னராசா

17. யாழ்ப்பாணத்தில் "கலைமகள் சரஸ்வதிக்கு" ஒரு சிறு கோவில் உண்டு. அது அமைந்துள்ள இடம் எது?
1) கீரிமலை 2) கொக்குவில்
3) நல்லூர் 4) அரியாலை

18. அதிகளவில் பக்திப் படங்களை இயக்கி அருட் செல்வர் என்ற பட்டம் பெற்ற இயக்குநர் யார்?
1) கே.பாலச்சந்தர் 2) இராம நாராயணன்
3) பி.மாதவன் 4) ஏ.பி.நாகராஜன்

19. நாரதர், அகத்தியர், இராவணன் மூவரும் ஒரு கலையில் வல்லவர்கள் அக்கலை எது?
1) நாட்டியக்கலை 2) இசைக்கலை
3) சிற்பக்கலை 4) மந்திரக்கலை

20. தினமுரசு தினப்பத்திரிகையாக எப்போதிருந்து வெளிவரத் தொடங்கியது?
1) 2002 ஐப்பசி 01 ஆம் திகதி
2) 2010 ஐப்பசி 01 ஆம் திகதி
3) 1990 மாசி 19 ஆம் திகதி
4) 1993 தை 01 ஆம் திகதி

## நிபந்தனைகள்

- 20 வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு கேள்வியின் கீழும் தரப்பட்டிருக்கும் நான்கு விடைகளில் சரியான விடையின் கீழ் கீறிட வேண்டும்.
- தினமுரசு நாளிதழில் உள்ள இந்தப் படிவத்திலேயே சரியான விடைகளின் கீழ் கீறிட்டு, படிவத்தைக் கத்தரித்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வேறு தாள்களில் எழுதி அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
- விடைகள் யாவும் இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகத்திலும் அல்லது நல்லூரில் திருவிழாக் காலத்தில் அமைந்திருக்கும் எமது அலுவலகப் பந்தல்களிலும் ஒப்படைக்கலாம்.
- விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி **27.08.2011**
- போட்டி முடிவுகள் நல்லூர்த் தீர்த்தத்திருவிழா அன்று அறிவிககப்படும். அன்றைய 'தினமுரசு' நாளிதழில் வெளியிடப்படும். பரிசில்கள் பூங்காவனத் திருவிழா (29.08.2011) அன்று வழங்கப்படும்.
- போட்டி தொடர்பான தனிப்பட்ட கடிதத் தொடர்புகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தினமுரசு குடும்பத்தின் ஊழியர்கள் எவரும் போட்டியில் பங்குபற்ற முடியாது.
- தகைமை சார்ந்த தேர்வாளர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தொ.பேசி இலக்கம்: .......................... ..........................

கையொப்பம்

# நாடாளுமன்ற தெரிவுக்குழு தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும்

## அதுவே இதன் அடிப்படைக் கோட்பாடு


(கொழும்பு)

அனைத்துக் கட்சிப் பிரமுகர்களையும் உள்ளடக்கியதாக அமைக்கப்படவிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தேசிய ஒற்றுமையை வலியுறுத்தி நிலைநாட்டும் குழுவாகவும் செயற்பட விருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இதன் அடிப்படையில் இந்தக் குழு, அரசியல் மற்றும் யாப்பின் அடிப்படையில் இலங்கை ஒரு நாடு என்ற அடிப்படையில் பொதுமக்களுக்கு அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் தமது அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஊக்குவித்தல் பொது மக்களுக்கு அதிகாரங்களை வழங்கல் மற்றும் மக்கள் தீர்மானங்களை மேற்கொள்ள வழி செய்தல் போன்ற காரணங்களை இந்தக்குழு பரிந்துரைக்கவுள்ளது. இந்தக்குழுவின் தலைவராக சபாநாயகரால் ஒருவர் பரிந்துரைக்கப்படவுள்ளார். அத்துடன் குழு உறுப்பினர்களும் சபாநாயகராலேயே நியமிக்கப்படவுள்ளனர்.

# அலரி மாளிகையில் இப்தார் நிகழ்ச்சி



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நோன்பு துறக்கும் இப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது. அரசியல் தலைவர்கள் மற்றும் பொது மக்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்

அமைச்சர்கள் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ரவூப் ஹக்கீம், ஏ.எச்.எம்.பௌஸி, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா, பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் ஜனாதிபதியுடன் உரையாடினர்.

முஸ்லிம் மக்களை கௌரவிக்கும் வகையில் வருடா வருடம் இந்த இப்தார் நிகழ்ச்சியை அலரி மாளிகையில் ஜனாதிபதி தொடர்ந்து நடத்திவருவது குறிப்பிடத்தக்கது.

# ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி 2012 இல் 300 பாடசாலைகள் தெரிவு

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2012ஆம் ஆண்டு முதற்கட்டமாக நாடளாவிய ரீதியில் 300 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக திட்டப் பணிப்பாளர் அனுர திசாநாயக்கா தெரிவித்தார்.

இவ் முன்னோடித் திட்டத்திற்கென நாடளாவிய ரீதியில் உள்ள 96 கல்வி வலயங்களில் இருந்து பாடசாலைகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

தரம் 6 இல் இருந்து க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பிரிவுகள் உள்ள பாடசாலைகள் இம் முதலாம் கட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளன.

மாணவர் அனுமதிக்கென நகரப்புற பாடசாலைகளை நாடிவரும் நிலைமையை மாற்றி கிராமப் புறத்திலுள்ள பாடசாலைகளுக்கு சகல வசதிகளையும் வழங்கி மாணவர் அனுமதியை அதிகரிப்பதே ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் நோக்கமாகும் என அனுர திசாநாயக்கா தெரிவித்தார்.

# குழாய் கிணற்றிலிருந்து விசேட வாயுக் கழிவு

## யுத்தக் களத்தில் பரபரப்பு

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் தோண்டப்பட்ட குழாய்க்கிணறு ஒன்றில் இருந்து விசேட வாயுவெளியேறி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புவியியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் தோண்டப்பட்ட குழாய்க்கிணறு ஒன்றிலிருந்து விசேட வாயுவொன்று வெளியேறுவதாக வண்ணாத்திவில்லு பொலிஸார் தெரிவித்தனர். புத்தளம் அரவக்காடு மற்றும் எழுவான்குளம் பகுதியில் நிலத்தடிப் பகுதியை பரீட்சிப்பதற்காக ஒரு வாரத்திற்கு முன் இக்குழாய் கிணறு தோண்டப்பட்டது.

இவ்வாயு வெளியேறுவதை அறிந்து அச்சமடைந்த ஊழியர்கள் இது குறித்து உடடியாக பொலிஸாருக்கு அறிவித்தனர். சீமெந்து தயாரிப்புக்காக இப்பகுதியிலிருந்து சுண்ணாம்புக்கல் மற்றும் ஏனைய கனியப் பொருட்கள் எடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாயு வெளியேற்றம் குறித்து புவியியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமும் வண்ணாத்திவில்லு பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கனடாவில் விமான விபத்து

(ரொரொன்ரோ)

கனடாவின் போயிங் 737 ரக ஜெட் விமானம் விபத்துக்குள்ளானதில் 12 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

நான்கு விமானப் பணியாளர்கள் உட்பட 15 பேர் குறித்த விமானத்தில் பயணித்ததாக கனேடிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்தவர்களின் தற்போதைய நிலைமைகள் குறித்து இதுவரை விபரங்களை வெளியிடாத பொலிஸார், விபத்து குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

# மருத்துவர் விபரம் கணினி மயமாகிறது

(கொழும்பு)

நாட்டில் உள்ள விசேட வைத் திய நிபுணர்களின் விபரங்களை சுகாதார அமைச்சால் கணினி மயப்படுத்தப்படுகின்றது.

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக சுகதார அமைச்சில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. இதனால் நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பில் பல சிக்கல் கள் ஏற்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சைக் குற்றம் சாட்டியிருந்தது. இதனைத் தொடர்ந்தே மேற் படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வன்னியில் பனை அபிவிருத்தி ஆரம்ப ஏற்பாடுகள் பூர்த்தி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலும் கிளிநொச்சியிலும் பனை அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க ஊற்றுப்புலம் கௌதாரிமுனை ஆகிய பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்தி சபையினர் தெரிவித்தனர்.

பனை உற்பத்தி பொருட்களுக்கு தற்போது நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் குடாநாட்டுக்கு வருபவர்கள் பனை உற்பத்தி பொருட்களை கொள்முதல் செய்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த அசாதாரண சூழல் காலத்தில் சேதமடைந்த கைதடி பனை அபிவிருத்தி ஆய்வு நிலையத்தினை இந்தியாவின் நிதி உதவியுடன் அண்மையில் புனர்நிர்மாணப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுமகன் வீட்டில் தாக்குதல் பிரதேச சபைத் தலைவர் அடாவடி

(பதுளை)

பதுளை, ஹந்தகொல்ல அலுபோகொல்ல பகுதியிலுள்ள வீடொன்றிற்கு பதுளை பிரதேச சபை உறுப்பினர் குழுவொன்று தாக்குதல் நடத்தியதாக பதுளை பொலிஸில் பெண்ணொருவர் செய்த முறைப்பாடு செய்தார்.

இதனையடுத்து, அக்குழுவைச் சேர்ந்த பதுளை பிரதேச சபைத் தலைவர் சரத் ராஜபக்ஷ (ஐ.ம.சு.கூ.) நேற்றுக் காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பதுளை பிரதேசசபைத் தலைவர் சரத் ராஜபக்ஷவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை பதுளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## இந்திய சரக்குக் கப்பல் கடத்தப்பட்டது

ஓமன் நாட்டு துறைமுகத்தின் அண்மையில் 21 கப்பல் பணியாளர்களுடனான சரக்கு கப்பலை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ளனர். இது குறித்து சரக்கு கப்பல் நிறுவனத்தை சேர்ந்த இயக்குனர்களில் ஒருவரான சதீஷ் அக்னிஹோத்ரி தகவல் வெளியிட்டுள்ளார். ஓமன் நாட்டில் உள்ள சாலா துறைமுகம் அருகே மென்த்தால் சரக்குகளுடன் ஆங்கிலோ ஈஸ்டர்ன் ஷிப் மேனேஜ்மென்ட் என்ற கப்பல் சென்று கொண்டிருந்தது.

கப்பலில் இந்தியாவை சேர்ந்த பணியாளர்கள் 21 பேர் பயணித்துள்ளனர். அனைத்து பணியாளர்களுடன் கப்பலை சோமாலிய கடற் கொள்ளையர்கள் கடத்தி சென்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார். தென்மேற்கு பருவமழை முடிவுக்கு வந்ததையடுத்து கடல் சீற்றம் குறைந்து காணப்படும் காலநிலையை சாதகமாக பயன்படுத்திகொண்டே கடற்கொள்ளையர்கள் இந்த கொள்ளையை மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ந்து துறைமுக ஊழியர்கள் கப்பலை விடுவிப்பது குறித்து கடற்கொள்ளையர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் சதீஷ் தெரிவித்துள்ளார்.

# புத்தளத்தில் கடும் வரட்சி குடிநீருக்கு அலையும் மக்கள்

புத்தளம் மாவட்டத்தில் காணப்படும் கடுமையான வறட்சியின் காரணமாய் பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. கடுமையான வெயில், மழையின்மை போன்றவற்றின் காரணமாக இப்பகுதி கிணறுகளில் நீர் வற்றிப் போயுள்ளன.

மேட்டுப் பகுதிகளில் வாழும் மக்கள் தமது பகுதிகளில் குடிநீர் கிடைக்காமல், தாழ்வான இடங்களுக்கு சென்று குடிநீர் கொண்டு வர வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகியுள்ளனர். சிலவேளைகளில் இவர்கள் குடிநீருக்காக பத்து முதல் பதினைந்து கிலோ மீட்டர் தூரம் வரை செல்லவேண்டிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கருவெலெகெஸ்வெவ, ஆனைமடு, முண்டல் போன்ற பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பல கிராமங்களில் இவ்வாறான குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது.


குடிநீர் தட்டுப்பாடு நிலவும் கிராமங்களுக்கு வெளியிடங்களிலிருந்து பவுசர் வண்டிகள் மூலம் குடிநீர் கொண்டு சென்று விநியோகிக்க பிரதேச செயலகங்கள் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன.

## தமிழ்க்கட்சி...

இந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர் சுதர்சன நாச்சியப்பன் இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் விசுவாசியெனவும், இந்த மாநாட்டைக் கூட்டுவதன் உள்நோக்கம் குறித்தும் தமிழ்நாட்டு ஊடகங்கள் விமர்சித்துள்ளன. தமிழ் நாட்டிலுள்ள கடும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களால் காங்கிரஸ் கட்சி தற்போது கடுமையான எதிர்ப்பிற்கு உள்ளாகியிருக்கும் நிலையில் இந்த மாநாட்டை ஏற்பாடு செய்திருப்பது குறித்து பல்வேறு விதமான ஊகங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

## செய்திப்பாணம்

**போருக்குப் பின்னான பொல்லா உலங்கூர்தி**
**நேருக்குப் பத்துக்கும் நிகராக - சேர்த்தனராம்**
**சிறிலங்கா ரஷ்யாவில் சீற்றமடை அமெரிக்கா**
**திறிலதை நோட்டமிடும் சீர்!**




நகர சபை, யாழ்ப்பாணம்



# தமிழக மீனவர்களைத் தாக்கியது அமைச்சர் டக்ளஸின் ஆட்களாம்!

## இலங்கைக் கடலுக்கு அத்துமீறி மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களுக்குப் பரிந்து யாழ். மீனவர்கள் மீது எகிறுகிறார் சீமான்



தமிழக மீனவர்கள் இழுவைப் படகுகளைக் கொண்டும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பாவித்தும் நம் கரையோரக் கடலில் உள்ள மீன்களை வாரிச் சென்றுவிடுவதால் தமது தொழிலுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுவதாக வடபகுதி மீனவர்கள் தொடர்ந்து முறையிட்டு வருவது தெரிந்ததே.

அத்தோடு, யுத்தகால கடற் தடையால் நீண்டகாலம் பாதிப புற்றிருந்த நமது மீனவர்கள், இப்போதுதான் தங்கள் தொழில் வாய்ப்பைத் திரும்பப் பெற்றிருக்கும் சூழலில், தமிழக மீன்பிடி முதலாளிகள் ஆட்களை அனுப்பி மீன்களை அள்ளிச்சென்று லாபம் குவிக்கும் அடாவடிச் செயல் குறித்து நீண்டகாலமாகவே நமது மீனவர்கள் கவலை வெளியிட்டு வருவதும் தெரிந்ததே.


இந்நிலையில், நேற்றுமுன் தினம் தமிழகத்தின் நாகை மாவட்டத்தில் இருந்து இலங்கையின் வடபகுதிக் கடலுக்குள் அத்துமீறி வந்து மீன் பிடித்தவர்களை வடபகுதி மீனவர்கள் எச்சரித்து விரட்டியிருந்தனர். இதைக் கண்டித்து நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார் 'நாம் தமிழர்' கட்சித் தலைவர் சீமான். அதில் அவர குறிப்பிட்டிருப்பதாவது:

நாகை மாவட்டம் அக்கரைப் பட்டு கிராமத்தில் இருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 15 மீனவர்கள், தாக்கப்பட்டுள்ளனர். பல படகுகளில் வந்த சுமார் 30 பேர் கட்டைகளால் அடித்தும், குத்தியும் தாக்கியுள்ளனர். மீனவர்கள் வைத்திருந்த திசையறி கருவிகளையும் கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

இந்த தாக்குதலை நடத்தியது இலங்கை மீனவர்கள் என்று செய்திகள் கூறுகின்றன. உண்மை அதுவல்ல. இலங்கைத் தமிழ் மீனவர்கள் ஒருபோதும் தமது சகோதர மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவதில்லை. அவர்களுடைய ஒரே கோரிக்கை, இழுவைப்படகைக் கொண்டும் தடை செய்யப்பட்ட வலைகளைக் கொண்டும் மன்னார் கடலில் மீன் பிடிக்க வேண்டாம் என்பதே. இதைத் தவிர இரு நாட்டு மீனவர்களுக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. இந்த தாக்குதல், இலங்கையில் அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தாவின் தூண்டுதலின் பேரிலேயே நடத்தப்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா, தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன் பிடிப்பது இலங்கைத் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிப்பதாக உள்ளது என்ற இலங்கை அரசின் சூழ்ச்சித் திட்டத்திற்கு உதவ, தனது ஆட்களை அனுப்பித் தமிழக மீனவர்களைத் தாக்கியுள்ளார் என்று சீமான் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

**இங்கிலாந்து, இந்தியா அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் நான்காம் நாள் ஆட்டம்**



**இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 591/6**
**இந்தியா முதல் இனிங்ஸ் 300**
**இந்தியா இரண்டாம் இனிங்ஸ் 129/3**

# நற்பெயரைப் பாதுகாக்க சர்வதேசப் பொறிமுறை

(கொழும்பு)

சர்வதேச அளவில் இலங்கையின் நற்பெயரைப் பாதுகாக்கும் வகையிலான புதிய பொறிமுறை ஒன்று விரைவில் வகுக்கப்படவுள்ளது. இப் பொறிமுறையூடாக இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் பிரச்சார நடவடிக்கைகளை முறியடிக்கும் விதமான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதன் ஒரு கட்டமாக ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலிய நாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் குழுவொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துள்ளது. இலங்கை தொடர்பில் சர்வதேச ரீதியாக நிலவும் அவப்பெயரை நீங்குவதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கை குறித்து இந்த சந்திப்பின்போது அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள், தமது நாட்டின் நன்மதிப்பை உயர்த்துவதற்கு முயற்சி செய்யவேண்டும் என ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியுள்ளார். அண்மைக்காலமாக அவ்வாறு செயற்பட்டவர்கள் குறித்து அவர் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸார் மீது தாக்குதல் வவுனியாவில் 9 பேர் கைது




கிராமத்துள் கிரீஸ் மனிதர்கள் நுழைந்தனர் என நேற்று முன் தினம் கூறப்பட்டதை அடுத்து பெரிய கோமரசன் குளத்திற்குச் சிவில் உடையுடன் சென்ற இரு பொலிஸார் பிரதேசவாசிகளால் தாக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸார் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை சம்பவத்தில் காயமுற்ற பிரதேச வாசிகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கடற்தொழிலும் கப்பல் போக்குவரத்தும் முடக்கம் மன்னார் குடாவில் எண்ணெய் அகழ்வு தீவிரம்

மன்னார் வளைகுடாவில் மீன்பிடி நடவடிக்கைகளும் கப்பல் போக்குவரத்துக்களும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இக் கடற்பகுதியில் எண்ணெய் அகழவுப் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாலேயே மேற்படி நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை எண்ணெய் அகழ்வு இடம்பெறும் மன்னார் குடாவை அண்மித்த பகுதிகளில் கப்பல் போக்குவரத்து நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக, வர்த்தகக் கப்பல போக்குவரத்துப் பணிப்பாளர் சாந்த வீரகோண் குறிப்பிடுகிறார்.

எண்ணெய் அகழ்வு நடவடிக்கையை முன்னெடுக்கும் நிறுவனங்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கமைய இந்த பகுதியூடாகக் கப்பல் போக்குவரத்துக்களை மேற்கொள்ளவேண்டாமென அறிவித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எண்ணெய் அகழ்வு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கப்பல் போக்குவரத்திற்கு இப்பிரதேசம் பொருத்தமற்றது என தெரியவருகிறது. மேலும் குறித்த பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மர்ம மனிதன் பற்றி வதந்தி பரப்பியவருக்குச் சிறை



கிரீஸ் பூதம் (கிரீஸ் யக்கா அல்லது மர்ம மனிதன்) தொடர்பில் தவறான தகவல்களைப் பரப்பியதாகக்கூறி கைதுசெய்யப்பட்ட முகத்துவாரப் பிரதேச முச்சக்கர வண்டிச் சாரதியை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கிரீஸ்பூத நடவடிக்கையின் பின்புலமாக அரச [illegible]செயற்படுவதாக முச்சக்கர வண்டிச் சாரதி மக்களை அச்சுறுத்தியதாக குற்றம் சுமத்தியே அவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் சாரதி பரப்பிய பிழையான கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

# பண மோசடிக் கும்பல்களைத் தேடி வலை வீசுகிறது பாதுகாப்புத் தரப்பு




நண்பர்கள், உறவினர்கள் மற்றும் விளம்பரங்கள் போன்ற பல்வேறு உத்திகளைப் பயன்படுத்திப் பண மோசடி செய்யும் நபர்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. சமூகசேவை அமைச்சும் பாதுகாப்பு அமைச்சும் இணைந்தே இந்த நடவடிக்கையை மேற்கொளள வுள்ளது. நாட்டின் பல பகுதிகளில் இவ்வாறான ஏமாற்றுக்கள் மூலம் பல இலட்சம் ரூபா மோசடி செய்த சம்பவங்கள் குறித்து மக்கள் செய்த முறைப்பாட்டினை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளாளர்.

# இராணுவத்தினருக்கு விசேட பயிற்சிகள்




(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கு அமைவாக கிழக்கில் உள்ள இராணுவத்தினருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டது.

திருகோணமலையில் இடம் பெற்ற இப் பயிற்சியில் திடீர் வீதிச் சோதனைகள், அவசர நிலைமைகளை எதிர்கொள்ளல் போன்ற விடயங்கள் இடம்பெற்றது.

கிழக்கில் மர்ம மனிதர்களால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாகவே இப்பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. அதேவேளை கிண்ணியாவில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், புதிய இராணுவ அலகுகள் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ள தாகக் குறிப்பிடப்படுகிறது.





**யாழ். குடாநாட்டிலேயே மிகப் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ள அதி கம்பீர ஸ்வர்ண கலாபன நூதன நவதள ஸ்ரீ சண்முக ராஜகோபுரத்தின் ஸ்வர்ண வாசல் நேற்றுக்காலை 6 மணிக்குத் திறக்கப்பட்டது. இக்கோபுர வாசலுக்கு நேரே திருப்புகழ் அருளிய அருணகிரிநாதருக்கு சிறப்புக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது. கோபுரத்தின் முதலாம் தளத்தில் அமைந்திருக்கும் கிளி, அருணகிரிநாதார் கிளிவடிவம் தாங்கிநின்று கந்தரலங்காரம் பாடியதை சுட்டி நிற்கிறது.** (படங்கள் : ஜெனார்த்தனன்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒகஸ்ட் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.